# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,885 — 1969 දෙසැම්බර් 19 වැනි සිකුරාදා — 1969.12.19

14,885 ம் இலக்கம் — 1969 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 1295 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. | 1316 |
| பரீட்சைகளும் பரீட்சை பெறுபேறுகளும் பிறவும் .. | 1308 | உத்தியோக தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 1309 | அந்திய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 1316 | நாணுவிஞ அறிவித்தல்கள் .. .. | — |


## பதவிகள் வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினுல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினுலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிரியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதிததால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு ' நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் ' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆு திசெம்பர் மீ 14 ந் உ.

எல். டபிள்யூ. பி. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல். அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவற்றுடன் க.ப.த.ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இந்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினல், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தோர்சியடையவேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள் ; அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

*குறிப்பு.*—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தோர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.

**5. வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.

**6. யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு) விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. *பிற தேவைகள்.*—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினல் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோ வெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்துக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனல் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**— தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.

---

**AA 100/ × .2166/69.**

## அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்களம்

### தந்திப் போக்குவரத்துப் பொறியியலாளர் பதவிகள்

அஞ்சல் தந்திப் போக்குவரத்துத் திணைக்களத்திலே தந்திப் போக்குவரத்து பொறியியலாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அலுவலகத்திலே பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில் செய்யப்பட வேண்டிய விண்ணப்பங்கள் பின்வரும் திகதியன்றோ அதற்கு முன்போ கொழும்பு 1, அ. அ. பெட்டி 500, அரசாங்க சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு இடைக்கும் வண்ணம் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

(அ) உள்ளூர் விண்ணப்பங்கள் : 16.1.1970.
(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 23.1.1970.

**குறிப்பு :**

(i) அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களுக்காக வேண்டுகோள் அஞ்சலில் அனுப்பும்பொழுது முத்திரையிடாத 9″ × 4″ அளவுக்குக் குறையாத முகவரியிடப்பட்ட உறையையும் உள்ளடக்கி, பரீட்சார்த்தி அரசாங்க சேவையில் ஒரு உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர் அல்லை என்பதையும் தெளிவாகச் சுட்டிக்காட்டப்படலும் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவமோ, அத்தகைய படிவத்தின் சார்பில் எழுதப்படும் கடிதமோ தபாலில் காணுமற்போய்விட்டது என்றோ, தாமதமாக வந்தடைந்தது என்றோ செய்யப்படும் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கடைசிநாள் வரை தமது விண்ணப்பங்களைச் சுணக்கும் விண்ணப்பகாரர், தாமே, அத்தகைய தாமதத்தால் ஏற்படும் பலாபலன்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(iii) வெளிநாட்டு விண்ணப்பகாரர் விண்ணப்பப் படிவங்களை வெளிநாட்டு இலங்கைப் பிரதிநிதி அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவர்கள், விரும்பினல், தமது விண்ணப்பங்களை, குறிப்பிடப்பட்ட காலவரையின் இடையில், வெளிநாட்டு இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்துக்கோ தமது வாசஸ்தலத்துக்கு அருகாமையிலுள்ள இலங்கைத் தூதராலயத்துக்கோ, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபை செயலாளருக்கு, அனுப்பிவைக்கப்படுவதற்காக சமர்ப்பிக்கலாம்.

**(iv) மருத்துவச்சோதனையும் பயணச்செலவும்.**—இலங்கை அரசாங்கத்தினல் நியமனம் பெறும் வெளிநாட்டு இலங்கை உத்தியோகத்தர் தாம் சேவை செய்வதற்கு போதிய உடல்நலத்தை உடைவர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்காக அங்கீகாரம் பெற்ற மருத்துவர் ஒருவரினல் தம்மை பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். அத்தகைய சோதனையின் செலவும் இலங்கைக்கு வரும் பயணச் செலவும் உத்தியோகத்தராலேயே கொடுக்கப்படவேண்டும்.

**2. நியமன விதிகளும் சேவை நிபந்தனைகளும்.—(i)** இப்பதவி நிரந்தரமானது ; இளைப்பாற்றுச் சம்பளமுடையது ; தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரரால் கைம்பெண், அநாதைப் பிள்ளைகள் நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்படவேண்டும்.

(ii) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர் நியமனம் பெறமுன் கண் பார்வை பரிசோதனையொன்றினும் மருத்துவச் சோதனையொன்றினும் சித்தியடையவேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர் தந்திப் போக்குவரத்து வேலையிலே வெளிநாட்டில் பயிற்சி பெறுவதற்காக ஒழுங்குகள் செய்யப் படலாம். பயிற்சி சாதாரணமாக 2 வருடம் வரை நீடித்தாலும் அதனை சூழ்நிலையைப் பொறுத்து குறைக்கவோ மேலும் நீடிக்கவோ முடியும். பயிற்சியின் சார்பிலே கொடுக்கப்படவேண்டிய படிகள் முதலியன பயிற்சி கொடுக்கப்படும் சமயத்திலே, நடைமுறையிலுள்ள அரசாங்கப் பிரமாணங்களுக்கமைவாயிருக்கும். அத்தகைய பயிற்சியின் சார்பிலே வெளிநாட்டுக்குப் பயணமாகுமுன், விண்ணப்பகாரர், கீழ்க்கண்டவற்றின் சார்பிலே, இலங்கை அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்ய வேண்டும்.

(அ) பிறவற்றுடன் விதிக்கப்பட்ட பயிற்சி நெறியை விசுவாசத்துடனும் ஊக்கத்துடனும் பின்பற்றி அதனை திருப்திகரமாக முடித்து அவசியமானால் குறிப்பிடப்பட்ட (இலங்கை அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்படும்) ஒரு காலவரைக்கு இலங்கை அரசாங்கத் துக்கு சேவை செய்ய உடன்படல் ; அத்துடன்

(ஆ) நியமன விதிகளுக்கும், சேவை நிபந்தனைகளுக்கும் அமைவாக நடக்கத் தவறினால் இலங்கை அரசாங்கத்துக்கு அல்லது செலவுகளுக்கான பணத்தை வழங்கும் ஏனைய தாபனத்துக்கு எல்லாச் செலவுகளினதும் (சம்பளம், படிகள், பயணச்செலவு, கட்டணங்கள் முதலியன) சார்பில் செலவழிக்கப்பட்ட பணத் தைத் திருப்பிக் கொடுப்பதற்கு உடன்படல்.

(iv) உதவித் தந்திப்போக்குவரத்துப் பொறியியலாளர் பதவியை உறு திப்படுத்துதல் பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதிலேயே தங்கியிருக்கும். (அவ்வகையான பயிற்சி ஒழுங்கு செய்யப்பட்டு நியமனத் திகதியிலிருந்து 3 வருடத்துள் பூர்த்தி செய்தல் வேண்டும்).

(v) உத்தியோகத்தர் ஒருவரது தகுதிகாண் காலத்தின்போது அவரது நன்னடத்தையிலோ, உத்தியோகக் கடமை சார்பான சிரத்தையிலோ, நியமன உறுதி சம்பந்தமாக விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறை வேற்றுவதில் உத்தியோகத்தருக்குள்ள ஆற்றலிலோ, அஞ்சல் அதிபர் நாயகத்துக்கும் தந்திப் போக்குவரத்து அதிபருக்கும் அதிருப்தி உண்டாகி னால் உத்தியோகத்தர் எந்நேரத்திலும் வேலைநிறுத்தம் செய்யப்படலாம்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—

வருடத்துக்கு ரூபா 7,800—3 × 360—8,880/9,600—4 × 360, 11 × 480—ரூபா 16,320. வருடத்துக்கு ரூபா 9,600 க்கும் ரூபா 13,920 க்கும் முன்பு வினைத் திறமைகாண் தடை. வருடத்துக்கு 13,440 ரூபா சம்பளத்துக்கு மேற்பட்ட சம்பளத்தைப் பெறமுன் எல்லா உயர்தொழில் தகைமைகளையும் பெறுதல் அவசியம். எல்லா உயர்தொழில் தகைமைகளையும் உடைய உத்தியோ கத்தர் ஒருவர் வருடத்துக்கு 9,960 ரூபா சம்பளத்தைப் பெறும் தகுதியுடையவராவார்.

வருடத்துக்கு ரூபா 9,600 பெறும்பொழுது அடையும் வினைத் திறமைகாண் தடையிலிருந்து விதிக்கப்பட்ட பரீட்சையொன்றில் சித்தியடைவதன் மூலம் நீங்கலாம்.

4. **தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கீழ்க்கண்டவற்றின் சார்பிலே திருப்திகரமான அத்தாட்சி வழங்கவேண்டும் :—

(அ) சிறந்த குண இயல்பும் உடல்நலமும் உள்ளவர் என்று ;

(ஆ) 1970.1.16 ஆம் திகதியன்று 20 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் உள்ளவர் என்று. பூரண உயர் தொழில் தகைமைகளையுள்ள பொறியியலாளர் விடயத் தில் மிகவும் கூடிய வயதெல்லை தளர்த்தப்படும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களுக்கு இவ் வயதெல்லை பாதிக்கமாட்டாது).

(இ) அங்கீகாரம் பெற்ற சர்வகலாசாலையொன்றின் மின்சாரப் பொறி யியல் துறை பட்டதாரியொருவர் என்று ; அல்லது

(ஈ) அங்கீகாரம் பெற்ற பொறியியல் கல்லூரி அல்லது நிறுவனம் ஒன்றின், மின்சாரப் பொறியியல் சர்வகலாசாலைப் பட்டத்துக்குச் சமமான டிப்ளோமா பட்டத்துக்குரியவர் என்று ; அல்லது

(உ) லண்டன் மின்சாரப் பொறியியலாளர் நிறுவனம், பிரிட்டிஷ் மின்னணு வானொலி பொறியியலாளர் நிறுவனம் என்ப வற்றுள் ஒன்றினது பட்டதாரி.

குறிப்பு :—மின்சார பட்டம் அல்லது " டிப்ளோமா " பட்டத்தையுடைய வரும் குறைந்தபட்சம் 2 மின்சாரப் பொறியியல் பாடங்களிலாவது சித்தியடைந்தவருமான விண்ணப்பகாரரின் விண்ணப்பம் விசேடமாக கருதப்படும் ; ஆனால் அத்தகைய பாடங்களில் ஒரு பாடமாவது பட்ட பரீட்சையின் அல்லது டிப்ளோமா பரீட்சையின் இறுதி பரீட்சையின் பாடமாயிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர் பின்வரும் பத்திரங்களில் ஒன்றினையோ எல்லா வற்றையுமோ கேட்கப்படும்போது சமர்ப்பிக்கத் தயாராயிருக்கவேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் (குறிப்பு :—ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணங்களின் கோவைக்காக வழங்கப்படும் பிறப்புச் சார் பான சான்றிதழ் என்பன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டம் அல்லது மிகவும் உயர்ந்த கல்விச் சார்பான சான்றிதழ்.

(இ) குணஇயல்பு சார்பான இரண்டு சான்றிதழ்கள்.

(ஈ) உயர்தொழில் அல்லது தொழில்நுட்ப தகைமைகள் சார்பான சான்றிதழ்கள்.

(உ) சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் தேறியுள்ள மிகவும் உயர்ந்த பரீட்சை சார்பான சான்றிதழ்.

குறிப்பு:—(1) விண்ணப்பப் படிவத்துடன், எந்த விதமான பத்திரமோ, பத்திரத்தின் பிரதிகளோ இணைக்கப்படக்கூடாது.

(2) கேட்கப்படும்போது பத்திரங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்ப காரரது விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படவேண்டும். எனினும் விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்தின் சார்பாக அரசாங்க சேவை அதிகாரசபை செயலாளருக்கு, விண்ணப்பங்களுக்கான முடிவு திகதியன்றோ அதற்கு முன்போ கிடைக்கும் வண்ணம் நேரடியாக அனுப்பிவைக்க வேண்டும். விண்ணப்பத்துடன் வழங்கப்படும் அச்சிடப் பட்ட (" பீ " எனக் குறிக்கப்பட்ட) அஞ்சல் அட்டையை இக்காரணத்திற் காகப் பாவனை செய்யவும்.

7. விண்ணப்பங்களும் அதனுடன் சம்பந்தப்பட்ட ஏனைய கடிதப் போக்குவரத்தும் அரசாங்க சேவை அதிகாரசபை செயலாளருக்கு, தவிர்ந்த இந்தத் திணைக்களத்தைச் சேர்ந்த ஏனைய உத்தியோகத்தருக்கு விலாசமிடப்படக்கூடாது.

8. இந்த அரசாங்க வர்த்தமானியின் I ம் பிரிவின் II ம் பாகத்தின் ஆரம்பத்திலே பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை பதவிகளின் நியமனங்களுடன் சார்புள்ள பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப் படிவங்களுடன் வழங்கப்பட்டதும் (" ஏ " எனக் குறிக்கப்பட்டதும்) அச்சிட்ட அஞ்சல் அட்டையில் கொடுக்கப்பட்டதுமான அறிவுறுத்துரைகளுக்கேற்ப பரீட்சார்த்திகள் அதனைப் பூரணப்படுத்தி, அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் இந்த அலுவ லகத்தில் கிடைக்கப் பெற்றதும், பெற்றுக் கொண்டமை அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய, நடவாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை அறிவிக்கப்பட மாட்டாது. இத்தேவைக்கு அமைய நடந்தவர்கள், முடிவு திகதியிலிருந்து மூன்று வாரங்களுக்குள் பெற்றுக் கொண்ட அறிவிப்பைப் பெறாதுவிடின் அரசாங்க சேவை அதிகார சபைச் செயலாளருக்கு இவ்விடயத்தை உடனடியாக அறிவித்தல் வேண்டும். இத்தேவைக்கமைய நடவாத விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ளுவதற்கான கோரிக்கை செய்யும் தகைமையை இழந்து விடுவார்.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்கசேவை அதிகாரசபை அலுவலகம்,
அ. பெ. இல. 500,
காலிமுக செயலாளர் கருமாலயம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 12 ந் உ.

12—752/1—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

இலக்கம் : ஏபி/108/X 2169/69

## கமத்தொழில் திணைக்களம்

### கமத்தொழில் உத்தியோகத்தர் பதவிகள் (பெண்கள்)

### ஊர் மனைப்பொருளாதார அபிவிருத்தி, கமத்தொழில் திணைக்களம்

14.11.69 எனத் திகதியிடப்பட்டதும் 14,888 இலக்க முடையதுமான அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிய அறிவித்தலைப் பார்க்க.

2. மேற்குறித்த பதவிக்கான உள்ளூர் வெளியூர் விண்ணப்பங்களின் கடைசித் திகதி 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
த. பெ. இலக்கம் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு—1,
12, திசெம்பர் 1969.

12—752/2—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

இல. A. 87 X. 2171/69.

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### துணை அதிபர், அரசினர் ஆசிரியர் கலாசாலை, மஹரகம

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள மகரகம அரசினர் ஆசிரியர் கலாசாலையிலுள்ள துணை அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும் :—

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள், 1970.1.16 ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1970.1.23.

**குறிப்புகள்** (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப் பட்டதும் 9″ × 4″ அளவிற் குறையாததும் முத்திரையிடப் படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரையும் பொறுத்திருப் பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப் பாவர்.

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள் ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக்கிட் டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாள ருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுதற்கு வெளி நாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர் கள், சேவைக்குத் தகுதியான உடல்நலம் உடையவர் களாகவிருக்கின்றார்களா என்பதை உறுதிப்படுத்துவதற் காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு கேட்கப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந் தரமானதும் பாடசாலை ஆசிரியர் உபகாரச் சம்பளவிதிகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடையதுமாகும். நியமதாரி ஒருவர், தெரிவு செய்யப்படுதற்குமுன் உபகாரச் சம்பளப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் உபகாரச் சம்பள உரித்துடைய ஆசிரிய பதவியை வகிப்பவராயின் இப்பதவி அவர் வகிக்கும்வரை உபகாரச் சம்பள உரித்துடையதாகப் பிரகடனஞ் செய்யப்படும்.

3. **சம்பளமும் ஏனைய படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—

ரூ. 11,040—7 × 480—14,400—வருடாந்தம் (திரட்டிய சம்பளம்)

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகள் உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(அ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும் ;

(ஆ) 1970.1.16 ந் திகதியன்று 35 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அரசினர் சேவையில் ஏற்கனவே உள்ளவர்களுக்கு அமையாது ;

(இ) பட்டம் பெற்ற பின்னரேனும் வேறு வகையிலேனும் கற்பித்தலில் முழு நேரப் பயிற்சி பெற்றவர்களும் பட்டம் பெற்றபின் குறைந்த பட்சம் 8 வருட கற்பித்தல் அனுபவம் பெற்றவர்களுமான பட்டதாரியாக இருக்க வேண்டும். ஆசிரியர் களுக்கு பயிற்சி அளித்தலிலும் நிருவாக வேலையிலும் அனுபவம் பெற்றுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப் படும். அபேட்சகர்கள் கடமை ஆற்றுதற்கு வேண்டிய சிறந்த அறிவைச் சிங்களத்தில் பெற்றிருக்க வேண்டும் ; எனினும், சிங்களத்தில் மேலதிக தகைமைகளை தன்னால் விதிக்கப்படும் ஒரு காலத்துக்குள் பெறுமாறு எவ்வபேட்சகரையும் மகா வித்தியாதிபதி வேண்டலாம். அங்கீகரிக்கப்பட்ட ஒரு கல்வி நிலையத்தின் அதிபராக அல்லது திணை அதிபராக அல்லது மாவட்டப் பரிசோதகராகப் பெற்றுள்ள நிருவாக அனுபவம் மேலதிக தகைமையாகும்.

5. வேண்டப்படும் நேரத்தில், அபேட்சகர்கள் பின்வரும் சாதனங் களில் எவற்றையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு. கு. ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்குச்சட்டங்களின் நோக்கத்துக்கெனக் கொடுபடும் பிறப்புச் சாட்சிப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) பட்டப் பரீட்சைப் பத்திரம் அல்லது மிக உயர்ந்த கல்வித் தராதரப் பத்திரம் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு ; இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருக்க வேண்டும் ;

(ஈ) உயர்தொழில் தகைமையை அல்லது தொழில் நுட்பத் தகைமையை அல்லது இவ்விரு தகைமைகளையும் பற்றிய சான் றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைப் பத்திரம்.

**குறிப்பு.**—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற் றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங் கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங் களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப் படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப் படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன்பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது), அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படுவார்கள். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித்திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெருவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர்தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 12 ந் உ.

12-752/3—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

இல. AA 94/X2172/69

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### நீர்ப்பாசனப் பொறியியலாளர் பதவிகள் (தற்காலிகம்)

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் (தற்காலிகம்) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இத்திணைக்களத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழு, த. பெ. எண். 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அதற்குமுன் கிடைக்கக்கூடியதாயனுப்பி வைத்தல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 16.1.1970.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 23.1.1970.

**குறிப்பு :** (i) அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்வோர், 9" × 4" அளவிற்குக் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஓர் கடிதவுறையில் தமது சொந்த முகவரியை எழுதி கடிதத்துடன் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் அரசாங்க சேவையில் உள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(ii) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவார்.

(iii) வெளி நாட்டிலுள்ள விண்ணப்பதாரர் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிற நாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பதாரர் விரும்பினால் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்குச் சமீபமாயுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பிவைக்கலாம்.

(iv) **மருத்துவப் பரிசோதனையும் பயணச் செலவும்**— இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளி நாட்டில் தெரிவுசெய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாவென்பதை உறுதிப்படுத்தும் கருத்துடன் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் மருத்துவப் பரிசோதனைக்குச் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவச் சோதனைக்குரிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணம் செய்வதற்குரிய செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**.—பதவிகள் தற்காலிகமானதும் இளைப்பாற்றுச் சம்பளமற்றவைகளுமாகும். உத்தியோகத்தர் தமது சம்பளத்தில் 5 வீதம் அரசாங்க சேவை சகாய நிதிக்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும். பதவி நியமனங்கள் பூரண தற்காலிக அடிப்படையிலும் ஒரு மாத அறிவித்தலுடன் எவ்வகையிலும் அவை நீக்கப்படுவதுமானவை.

3. **சம்பளம்**.—பதவிக்குரிய திரட்டிய வேதனத் திட்டம் பின்வருமாறு : ஆண்டொன்றுக்கு ரூபா 7,800—3 × 360—8,880/9,600—4 × 360 உம் 11 × 480—ரூபா 16,320 ;

(ஆண்டொன்றுக்கு ரூபா 9,600 க்கு முன்னும் 13,920 க்கு முன்னும் வினைத்திறமைகாண் தடையும் உண்டு) ;

1.10.69 க்கு முன் இருந்த அடிப்படைச் சம்பளத் திட்டம் :— ஆண்டொன்றுக்கு ரூபா 5,160—3 × 360—6,240/6,960—4 × 360 ம் 10 × 480—ரூபா 13,200.

(ஆ) உயர்தொழிற் தகைமையுடைய அதாவது எம். ஐ. சீ. ஈ. பொறியியலாளர்கள் சேவையில் சேரும்போது ஆண்டொன்றுக்கு ரூபா 9,960 என்ற மேற்கூறப்பட்ட அளவுத்திட்டத்தின் சம்பள முனையில் கணிக்கப்படுவர்.

(இ) ரூபா 9,600/– இல் கணிக்கப்பட்ட வினைத்திறமைகாண் தடையைக் கடப்பதற்கு பொறியியலாளர்கள் திணைக்கள நடைமுறைகளிலும், கணக்கிலும், தமிழிலும் (வாய்மொழி) மற்றும் பாடங்களிலும் விதிக்கப்பட்ட பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

**குறிப்பு**.—உயர்தொழிற் தகைமையுடன் (எம். ஐ. சீ. ஈ.) சேவையில் சேரும் பொறியியலாளர்கள் நியமனத்தன்றிலிருந்து இரு வருடங்களுக்குள் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

(ஈ) மேற்கூறப்பட்ட சம்பள அளவுத்திட்டத்தில் ரூபா 13,440 என்ற சம்பள முனையைக் கடப்பதற்கு பொறியியலாளர்கள் உயர் தொழிலுக்குரிய முழுத் தகைமைகளையும் அதாவது எம். ஐ. சீ. ஈ. பெறல் வேண்டும்.

4. **வேண்டிய தகைமைகள்**.—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் சமர்ப்பிக்க வேண்டிய திருப்திகரமான சான்று, அவர்

(அ) சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 16.1.1970 தேதியில் 21 வயதிற்குட்படாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு மேல் வயது எல்லை கணிக்கப்படமாட்டாது).

(இ) இலங்கைக் கலாசாலையில் மேலதிகமாக விரும்பும் நீரியல் பாடத்துடன் குடியியல் எந்திரவியலில் பொறியியல் பட்டம் அல்லது இதற்கு சமமான அங்கீகரிக்கப்பட்ட பட்டம் அல்லது (லண்டன்) சிவில் எஞ்சினியர் நிலையத்தால் நடாத்தப்படும் பரீட்சையில் பகுதி I லும் II லும் சித்தியெய்தல் அல்லது இலங்கை எஞ்சினியர் நிலையத்தால் நடாத்தப்படும் சிவில் எஞ்சினியர் பரீட்சையில் பகுதிகள் I, I –B, II ஆகியவற்றில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.—அவ்வுத்தியோகத்தர் நீர்ப்பாசனத் திணைக்களத்தில், சேவை செய்து அனுபவம் பெற்றிருந்தால் எம்.ஐ.சீ.ஈ. பகுதி III இன் தகைமைக்கு மதிப்புடையவராவர்.

5. விண்ணப்பதாரர் பின்வரும் சாதனங்களில் எதையேனும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கப்படும்பொழுது அவைகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(ஆ) பட்டதாரிப் பட்டக்கல்வி அல்லது உயர்தரக் கல்விச் சான்றிதழ் ;

(இ) பண்புச் சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர்' கல்லூரி அதிபர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்தகைமையும் தொழிநுட்பத் தகைமையும் பற்றிய அல்லது தொழிநுட்பத் தகைமைகள் பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த சான்றிதழ்

**குறிப்பு** :(1) சாதனங்களையாயினும் அல்லது சாதனங்களில் பிரதிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பக்காரரின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களை தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு நேராக அறிவிக்க வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாயனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" ஆ " எனக் குறிப்பிட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர் அரசாங்க சேவை ஆணைக்குழு என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

9. விண்ணப்பப் படிவத்துடன் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறிப்பிட்டுள்ளது) அதன்கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பி அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமைபற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத விண்ணப்பக்காரரின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமைபற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின் பிரகாரம் ஒழுகத்தவறும் விண்ணப்பக்காரர் தங்கள் விண்ணப்பங்களைக் கவனிக்குமாறு கேட்கும் உரிமை யெதுவும் உடையாராகார்.

டீ. ஆர். எல். பாலசூரிய,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலகம்,
த. பெ. எண் 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1.
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 12 ந வ.

12–752/4—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

No. AB 112/X 2173/69

## கமத்தொழிற்றிணைக்களம்

### கமத்தொழில் உத்தியோகத்தர் பதவி

கமத்தொழில் திணைக்களத்திலுள்ள கமத்தொழில் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1, என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1970.1.16.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1970.1.23.

குறிப்பு :

(1) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டது. 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும் அபேட்சகராக வரவிருப்பவர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும்.

(2) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(3) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களைப் பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம்.

(4) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் :** இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கிறார்களாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :** இப்பதவிகள் நிலையானவையும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையனவையுமாகும். விண்ணப்பகாரர் முதற்கண் மூன்று ஆண்டுகளுக்கு தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

3. **சம்பளமும் படிகளும் :** இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :

ஆண்டொன்றுக்கு ரூபா 6,720—துவக்கமாகி ரூபா 360 ஆன 12 வருடாந்த ஏற்றங்களாலும் ரூபா 480 ஆன 11 ஏற்றங்களாலும் ஆண்டொன்றுக்கு ரூபா 16,320 வரை உயரும். (ரூபா 11,520 க்கும் ரூபா 14,880 க்கும் முன்னர் வினைத்திறமைகாண் தடைகளும் உண்டு).

குறிப்பு : ரூபா 11,520 ல் உள்ள வினைத்திறமை காண் தடைக்கு மேல் உயர்ச்சி உத்தியோகத்தர் இத்திணைக்களத்தால் விதிக்கப்படும் பரீட்சையில் சித்தி எய்தல் வேண்டும்.

4. **தேவையான தகைமைகள் :** ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

(ஆ) 1970.1.16 ல் 22 வயதுக்குக் குறையாமையும் 27 வயதுக்கு மேற்படாமையும்.

(இ) நன்கு மதிக்கப்படும் ஒரு பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞான முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்புச் சிறப்புப்பட்டம் உடமை.

மு.கு.—இலங்கை பல்கலைக்கழகத்தின் இறுதிப்பரீட்சைக்குத் தோன்றி பரீட்சை முடிபுகளை எதிர்பார்த்திருப்போரினது விண்ணப்பங்களும் கருத்துக்கெடுத்துக் கொள்ளப்படும். ஆனால் பல்கலைக்கழகம் முடிபுகளை வெளியிட்டவுடன் விண்ணப்பகாரர் சித்தியடைந்தமை எனக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும். இல்லையேல் அவர்களின் விண்ணப்பங்கள் கருதப்படமாட்டா.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்போழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்புன் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்;

(இ) குணச் சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர் ; கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத்தகைமையும்/உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு :

(1) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும் ; அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ ஆ ” எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறுகடிதத் தொடர்புகளையும் செயலாளர் அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் 1 ஆம் பாகம், 2 ம் பிரிவில் வெளியிடப்பட்டுள; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (“ அ ” எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பகாரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகாரசபை.

அரசாங்க சேவை அதிகாரசபை அலுவலகம்,
அ. பெ. 500,
காலிமுகச் செயலகம், கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 12 ந் வ.

12-752/5—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## காதியின் பதவி

முஸ்லீம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின்கீழ் தங்காலை நீதிபரிபாலனப் பிரிவுக்கான காதியின் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கென நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்கள் கோருகின்றது.

2. விண்ணப்பகாரர்கள் நல்லொழுக்கமும் நல்ல நிலையிலுள்ளவர்களுமான ஆண் முஸ்லீம்களாகவும், 35 வயதிற்குட்படாதவர்களாகவும், இலங்கைப் பிரசைகளாகவும் இருத்தல் வேண்டும்.

3. தெரிவு செய்யப்படுவோருக்கு வழங்கப்படும் நியமனக் கடிதத்திற் குறிக்கப்படும் ஒரு காலவெல்லைக்கு அவர் நியமிக்கப்படுவர்.

4. காதி ஒருவர் எப்பிரதேசத்திற்கென நியமிக்கப்படுகிறாரோ அவர் அப்பிரதேசத்திலேயே வசிக்கச் சட்டப்படி கட்டுப்பாடுடையர்.

5. விண்ணப்பங்கள் 1970 ஜனவரி மாதம் 18 ஆந் திகதிக்குப் பிந்தாது இந்த அலுவலகத்தைச் சேர்தல் வேண்டும். அத்துடன் அவை என்னிடமிருந்து பெறக்கூடிய விசேட படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும்.

சிறிமெவன் அமெரசிங்க,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச்சேவை ஆணைக்குழு அலுவலகம்,
தபாற் பெட்டி இல. 573,
கொழும்பு 12,
9.12.1969.

12-768—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

(பொ. நி/30/206)

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### தொழில் நுட்ப உதவியாளர் பதவிகள் (அமைப்பு, கணிய அளவீடு)

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சில் தொழில் நுட்ப உதவியாளர் (அமைப்பு, கணிய அளவீடு) பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப் படுகின்றன. கீழ்க்காணும் மாதிரிப் படிவத்துக்குச் சரியாக அமையத் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் “ நிர்ந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2” என்ற விலாசத்துக்கு 1969 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். இவ்வமைச்சிலுள்ள எவ்வுத்தியோகத்தரினதும் தனிப்பட்ட விலாசத்துக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்படலாகா.

2. **சம்பள விகிதம்.**—இப்பதவிக்கான சம்பள விகிதம் பின்வருமாறு :

ரூ. 2,580—11 × 120, 4 × 180 வருடாந்தம் ; வருடாந்தச் சம்பளம் ரூ. 4,620 ஐ அடைந்தபின் அப்படியில் 2 வருடம் தங்கியபின் ரூ. 4,800—3 × 180, 5 × 240—ரூ. 6,540 வருடாந்தம்.

3. **நியமன நியதிகள்.**—இப்பதவிகள் நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். இப்பதவியை வகிப்பவர்கள் விதவைகள் அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும்.

4. **வயதுக் கட்டுப்பாடு.**—விண்ணப்பதாரிகள் 40 வயதுக்குக் கூடாதவராய் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக்கட்டுப்பாடு அமையாது.

5. **கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும்.**—விண்ணப்பதாரிகள்:

(i) கணிதத்திலும் (தூய அல்லது பிரயோக) பௌதிகத்திலும் சித்தியுடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும். அல்லது கணிதமும் (தூய அல்லது பிரயோக) பௌதிகமும் உட்பட ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பத்திரப்பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, சித்தியடைந்திருக்கவேண்டும். அல்லது வேறு உயர்தர தராதரப் பத்திரம் பெற்றிருக்கவேண்டும்.

(ii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் கட்டட அமைப்புப் பயிற்சி நெறியின் I ம் II ம் படிகளைச் சித்திகரமாகப் பூர்த்தி செய்திருப்பதுடன் கட்டட அமைப்பில் மூன்று வருட பகுதி நேர எந்திரவியல் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். அல்லது வேறு உயர்தர தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

(iii) மேற்போந்த 5 ம் பந்தியின் (i) ம், (ii) ம் உப பந்திகளில் விதிக்கப்பட்டுள்ள தகைமைகளுடன், கீழே (அ) இன் கீழ் கொடுத்துள்ள தகைமைகள் தொழில்நுட்ப உதவியாளர் (அமைப்பு அளவீடு) பதவிகளுக்கும் (ஆ) இன் கீழ்க் கொடுத்துள்ள தகைமைகள் தொழில்நுட்ப உதவியாளர் (கணிய அளவீடு) பதவிகளுக்கும் கட்டாயமானவையாகும்.

(அ) குறைந்தபட்சம் 10 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ; இதில் 3 வருடத்துக்குக் குறையாத அனுபவம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிவில் எந்திரவியல் ஸ்தாபனத்தின் படம்வரை கந்தோரில் பெற்றிருக்கப்பட வேண்டும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிவில் எந்திரவியல் ஸ்தாபனத்தில் 10 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ; இதில் குறைந்தபட்சம் 3 வருட அனுபவம் கணியங்களின் அளவீட்டிலும் மதிப்பீடுகள் தயாரித்தலிலும் பெற்றிருக்கப்பட வேண்டும்.

6. மேற்போந்த 5 ம் பந்தியில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பெற்றுள்ளவர்களும் அரசினர் சேவையிலுள்ளவர்களுமானவர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

7. அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கு அமைபவையும் அரசினர் செய்திமடலின் I ம் பகுதி II ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளவையுமான பொது நிபந்தனைகளுக்கும் விசேட கவனம் கோரப்படுகிறது.

8. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும்:

(i) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக வழங்கப்படும் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

(ii) பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரங்கள் அல்லது தொழிற் தராதரப் பத்திரங்கள் அல்லது இவ்விரண்டு தராதரப் பத்திரங்களும்.

(iii) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைப் பற்றி சமீப காலத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட மூன்று நற்சாட்சிப் பத்திரங்கள் (ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் இவ்வுப பிரிவின் கீழ் கேட்கப்படும் நற்சாட்சிப் பத்திரங்களை அனுப்பவேண்டியதில்லை).

**குறிப்பு.**—தராதரப் பத்திரங்களினதும் நற்சாட்சிப் பத்திரங்களினதும் பிரதிகள் விண்ணப்பதாரிக்கு திருப்பி அனுப்பப்படமாட்டா.

9. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அங்ஙனம் அவை பெற்றுக்கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து இரண்டு கிழமைகளுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் அது பற்றி கல்வி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு (விலாசம் : பொது நிர்வாகக் கிளை, கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2) அறிவிக்க வேண்டும்.

10. விண்ணப்பம் தொழில்நுட்ப உதவியாளர் (அமைப்பு அளவீடு) பதவிக்காயின் " தொ. உ. அ." எனவும், தொழில்நுட்ப உதவியாளர் (கணிய அளவீடு) பதவிக்காயின் " தொ. உ. க." எனவும் விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் அடையாளம் இடப்படவேண்டும்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 10 ந் உ.

(பொ. நி/30/206)

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### தொழில் நுட்ப உதவியாளர் பதவிகள்
### (அமைப்பு, கணிய அளவீடு)

1. முழுப்பெயர் : ————.
(தெளிவாக எழுதவும்)

2. விலாசம் : ————.

3. விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளபடி
சரியான வயது: வரு : ————. மா : ————. நா : ————.
பிறந்த திகதி : ————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

4. நீர் ஒரு இலங்கைப் பிரசையா ? அப்படியாயின் வம்சாவழியாகவா அல்லது பதிவு காரணமாகவா ? : ————.

பின்வருவோர் பிறந்த இடம் :—
(i) விண்ணப்பதாரி : ————.
(ii) விண்ணப்பதாரியின் தகப்பன் : ————.
(iii) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பாட்டன் : ————.
(iv) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பூட்டன் : ————.

5. விண்ணப்பதாரி விவாகஞ் செய்தவரா விவாகம் செய்யாதவரா தாரமிழந்தவரா : ————.
(விவாகஞ் செய்தவராயின் விவாகத் திகதியையும் பிள்ளைகளின் எண்ணிக்கையையும் குறிப்பிடவும்.)

6. பெற்றுள்ள ஆகக்கூடிய கல்வித் தராதரங்கள் : ————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்)
பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள அறிவு : ————.
(i) சிங்களம் : ————.
(ii) தமிழ் : ————.
(iii) ஆங்கிலம் : ————.

7. பெற்றுள்ள தொழிற் தராதரங்களும் தொழில்நுட்பத் தராதரங்களும் ; யாதேனும் இருப்பின் : ————.
(தராதரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்)

8. விசேட தராதரங்கள், பயிற்சி, அனுபவம் பற்றிய விபரங்கள் : ————.

9. பாடசாலையிலிருந்து வெளியேறிய பின் வகித்த உத்தியோகங்களும் உரிய திகதிகளும் : ————.

10. நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கியுள்ள பிரபல்யம் வாய்ந்த மூன்று ஆட்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் : ————.

11. உமக்கு பணமுட்டு யாதேனும் இருக்கிறதா ? அப்படியிருப்பின் உமது பணமுட்டு எவ்வளவுக்கு ?: ————.

இவ்விண்ணப்பத்தில் கொடுபட்டுள்ள விபரங்கள் உண்மையானவையும் சரியானவையுமென நான் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன். இவற்றில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை என நான் தெரிவுசெய்யப்படுதற்கு முன் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பின் காணப்படின் சேவையிலிருந்து எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுதற்கும் நான் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : ————.

12-765—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### வெற்றிடங்கள்

### II ம் தர போர்மன் (சிவில்) பதவி

**கல்வித்தகைமைகளும் அனுபவமும் :** ஒரே தடவையில் ஆறு பாடங்களைக் கொண்ட சி. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. பரீட்சையில் சித்தியெய்தியிருப்பதுடன் மூன்று பாடங்களில் திறமைச் சித்தியும் ஐந்து வருடம் பயிலுநர் அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது தொடர்புள்ள அதே தொழிலில் பயிற்றப்பட்ட தரத்தில் 10 வருட அனுபவமுடையவராகவும் இருக்க வேண்டும்.

**வயது :** 30–40 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

**சம்பளம் :** $\dfrac{\text{ரூபா } 360\text{—}450 \text{ மா. ஒ. (எல்லாம் உட்பட)}}{6 \times 15}$

அரசாங்க திணைக்களங்கள், அரசாங்க உதவிபெறும் திணைக்களங்கள், மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் என்பவற்றிலிருந்து விண்ணப்பங்கள் அனுப்பும் ஊழியர்கள் அவ் விண்ணப்பங்களைத் தமது திணைக்களங்களின் அல்லது கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் தகுதி நிர்ணய/பரீட்சார்த்த காலம் மூன்று வருடங்களாகும், அத்துடன் அவர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க உத்தியோக மொழிச்சட்ட நியதிகளை அமுலாக்கும் முகமாக ஏற்கனவேயும் இனிமேலும் விதிக்கப்படும் சட்டத்திட்டங்களுக்கு இணங்கி ஒழுகுதல் வேண்டும்.

வாழைச்சேனையில் அல்லது இத் தீவிலுள்ள இக் கூட்டுத்தாபனத்தின் எந்த நிறுவனங்களிலும் தங்கியிருந்து வேலை செய்யும்படி தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் வேண்டப்படுவர்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் கல்வித் தகைமைகள் அனுபவம் என்பவற்றிற்குத் தக்கதாய் அவர்கள் மேற்படி சம்பளவரிசையில் தகுந்தபடி நியமிக்கப்படலாம்.

இக் கந்தோரில் கிடைக்கப்பெறும் படிவங்களில் **விண்ணப்பதாரர்கள்** தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து 16.1.1970 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தலைவர் அவர்கட்கு கிடைக்கக்கூடியதாக கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

தபாலில் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புபவர்கள் தங்களது விலாசம் பொறித்த முத்திரை ஒட்டிய நீண்ட உறையினை அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

தேவையான தகைமைகள் உள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

த. பெ. 1367,
356, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
1969 ம் ஆண்டு நவெம்பர் ஆண்டு 27 ந் உ.

12-858/1—19.12.69 ந் திகதிய வர்த்தமனி இல. 14,885

## அரசகரும மொழித் திணைக்களம்

### நிரந்தர/தற்காலிக மொழிபெயர்ப்பாளர் பதவிகள் (சிங்களம்)

அரசாங்க மொழித்திணைக்களத்திலுள்ள சிங்கள மொழி பெயர்ப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கீழ்க் காட்டப்பட்டுள்ள மாதிரி எழுதி 1970, ஜனவரி 21 ஆம் தேதி அல்லது அதற்குமுன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

2. **வேதனம்.**—பதவிக்குரிய ஆண்டு வேதன அளவுத்திட்டம் : ரூபா 6,600—180, 240—ரூபா 9,240 ; ஆண்டு வேதனம் ரூபா 8,040 வருவதற்குமுன் வினைத் திறமைகாண் தடையுண்டு.

3. **நியமன நியதிகள்.**—

**(அ) நிரந்தரப் பதவிகள் :**

(i) பதவி நிரந்தரமானது ; உபகாரவேதனத்திற்குரியது. பதவிக்குத் தெரிவு செய்யப்படுபவர் வி. அ. உ. ச. நிதிக்கு உதவு தொகை கொடுத்தல் வேண்டும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் குறுகிய கால அறிவித்தல் கொடுத்ததும் நியமனத்தை ஏற்கத் தயாராயிருத்தல் வேண்டும்.

(iii) ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு அல்லது சிங்களத்திலிருந்து ஆங்கிலத்திற்கு மூல மொழிபெயர்ப்புச் செய்தல், பிறபகுதிகள் அனுப்பும் சிங்கள மொழிபெயர்ப்புக்களை மீளவாய்தல், வேறு வழிகளில் அரசாங்க மொழித் திணைக்களத்திற்கு உதவி செய்தல் ஆகியனவே மொழி பெயர்ப்பாளரின் கடமைகளாகும். மொழி பெயர்ப்பாளர் உயர்ந்த இலக்கியத்திறனுடையவராயிருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படும்.

**(ஆ) தற்காலிக பதவிகள் :**

(i) பதவி தற்காலிகமானது ; உபகாரச் சம்பளத்திற்குரியதல்ல. பதவிக்குத் தெரிவு செய்யப்படுபவர், ஒரு மாதகால அறிவித்தலுடன் நிறுத்தப்படுதல் கூடும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் குறுகிய கால அறிவித்தல் கொடுத்ததும் நியமனத்தை ஏற்கத் தயாராயிருத்தல் வேண்டும்.

(iii) ஆங்கிலத்திலிருந்து சிங்களத்திற்கு அல்லது சிங்களத்திலிருந்து ஆங்கிலத்திற்கு மூல மொழிபெயர்ப்புச் செய்தல், பிற திணைக் களங்கள் அனுப்பும் சிங்கள மொழிபெயர்ப்புக்களை மீளவாய்தல் வேறு வழிகளில் அரசகரும மொழித் திணைக்களத்திற்கு உதவி செய்தல் ஆகியனவே மொழி பெயர்ப்பாளரின் கடமைகளாகும். மொழி பெயர்ப்பாளர் உயர்ந்த இலக்கியத்திறனுடையவராயிருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படும்.

4. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் சிங்களத்தையும் ஒரு பாடமாகவெடுத்துப் பட்டம் பெற்றவராக விருத்தல் வேண்டும் ; அல்லது,

(ஆ) பத்து ஆண்டு அனுபவம் பெற்ற சிங்கள மொழி பெயர்ப்பாளராகவோ, சிங்கள எழுத்தாளர் அல்லது நூலாசிரியராகவோ விருப்பதுடன்; பட்டதாரிகளுக்குக் குறையாத புலமைத் தகுதியுடையவராயும் ஆங்கில அறிவு நிறையப் பெற்றவராயுமிருக்கிறரெனத் தேர்வுக்குழுவினர் திருத்திப்படும் படியாக எடுத்துக் காட்டக் கூடியவராயுமிருத்தல் வேண்டும் ;

(இ) 1970 ஜனவரி 21 ஆம் தேதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும். (இந்த வயதெல்லைகள் ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்குப் பொருந்தா).

(ஈ) சிறந்த நல்லொழுக்கமுடையவராயும் உடல் நலமுடையவராயுமிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர் பின்வருவனவற்றின் படிகளை (மூல இதழ்களையல்ல) விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் ; அல்லது (பிறப்பு பதியப்படாத விண்ணப்பகாரருக்கு) பதிவாளர் தலைமை அதிபதி வயது பற்றி வழங்கிய சிறப்புச் சான்றிதழ்.

**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்காய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.

(ஆ) கல்வித்தகைமை/உயர்தொழிற்றகைமை அல்லது கல்வி உயர் தொழிற்றகைமைகள் பற்றிய சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரரின் தனகமைகள், குணம், இப்பதவி வகிப்பதற்குரிய தகுதி ஆகியனபற்றி அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள் (ஏற்கனவே அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பகாரர் இத்தேவையிலிருந்து விலக்களிப்படுவர்).

**குறிப்பு.**—சான்றிதழ்களினினதும் நற்சான்றிதழ்களினதும் படிகள் திருப்பியனுப்பப்படமாட்டா.

6. ஒரு விண்ணப்பப் பத்திரமோ அல்லது அது சம்பந்தமான கடிதமோ அஞ்சற் போக்குவரத்திற் காணுமற்போய்விட்டது அல்லது தாமதப்பட்டுள்ளது என்னும் முறைபாடு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைக் கடைசித் திகதிவரை தாமதப்படுத்துவராயின் அது அவர்கள் பொறுப்பாகும். அரசாங்க சேவையிலுள்ளவர்களிடமிருந்து குறிப்பிட்ட தேதிக்குப்பின் கிடைக்கும் விண்ணப்பங்கள், அவ் விண்ணப்பங்கள் குறிப்பிட்ட தேதிக்கு முன் சம்பந்தப்பட்ட திணைக்களத்தலைவரிடம் கிடைத்திருப்பதுடன் அத்தலைவர், சுணக்கத்திற்குச் செல்லுப்படியான காரணம் காட்டி, அதனை ஏற்றுக்கொள்ளுமாறு சிபாரிசும் செய்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. விண்ணப்பங்களை அல்லது அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளை அரசாங்க மொழி அலுவல் ஆணையாளருக்கே விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும் ; இந்தத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தரின் பெயருக்காயினும் அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், (II) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பங்கள் யாவும் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் தேதி கழிந்து மூன்று நாட்களுக்குள் அத்தகைய அறிவித்தலைப் பெறுத விண்ணப்பகாரர் உடனே அரசாங்க மொழி அலுவல் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டைப் பின்பற்றத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்குமாறு கேட்கும் உரிமையை இழந்தவராவர்.

பீற்றர் பி. அபயசேகரா,
அரசகரும மொழி அலுவல் ஆணையாளர்.

அரசகரும மொழித் திணைக்களம்,
22, றீட் சாலே, த. பெ. இல. 598,
கொழும்பு 7,
1969 ம் ௵ டிசெம்பர் ௴ 12 ந் உ.

## அரசகரும மொழித் திணைக்களம்

### நிரந்தர/தற்காலிக மொழி பெயர்ப்பாளர் பதவிகள் (சிங்களம்)

1. முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ——————.
(பெரிய தனி எழுத்தில்)
(அ) குடும்பப் பெயர் : ——————.
(ஆ) பிற பெயர்கள் : ——————.

2. அஞ்சல் முகவரி : ——————.

3. (அ) 1970.1.21 ஆம் தேதியன்று சரியான வயது :
ஆண்டு : ——————. மாதம் : ——————. நாள் : ——————.
(ஆ) பிறந்த தேதியும் இடமும் (பிறப்புச் சான்றிதழின்படி அல்லது வயதுபற்றிய சிறப்புச் சான்றிதழின்படி. இணைக்கப்படுதல் வேண்டும்) : ——————.

4. தேசிய இனமும், அது எவ்வாறு பெறப்பட்டது என்பதும் : ——————

5. (அ) விண்ணப்பகாரரின் தந்தையார் முழுப்பெயர் : ——————.
(ஆ) அவருடைய பிறந்த தேதியும் இடமும் : ——————.
(இ) அவருடைய தேசிய இனம் : ——————.

6. விண்ணப்பகாரர் மணமானவரா, மணமாகாதவரா, வாழ்விழந்தவரா என்பது (மணமானவராயின் மணமான தேதியும், பிள்ளைகள் எத்தனையென்பதும்) : ——————.

7. விண்ணப்பகாரர் பொதுக் கல்வி கற்ற பாடசாலைகளினதும், கல்லூரிகளினதும் பெயர்களும், அவற்றிற் சேர்ந்த தேதியும், அவற்றை விட்டு நீக்கிய தேதியும் : ——————.

8. (அ) கல்வித் தகைமை/உயர்தொழிற்றகைமை அல்லது கல்வி உயர் தொழிற்றகைமைகள் ; தகைமைகள் பெற்ற தேதியும் வகுப்புப் பெற்றிருப்பின் எந்த வகுப்பு என்பதும். (ஆதாரமாகச் சான்றிதழ்களின் படிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) ; ——————.
(ஆ) சிங்களம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைகள் : ——————.
தமிழ் : ——————.
ஆங்கிலம் : ——————.

9. பின்வருவனவற்றிய விபரங்கள் :—
(அ) மொழிபெயர்ப்பு வேலையில் அனுபவம் உண்டாயின் தொடர்பான தேதிகளுடன் குறிப்பிடுக : ——————.
(ஆ) இலக்கியம் சம்பந்தமான வேலையில் அனுபவம் உண்டாயின் தொடர்பான தேதிகளுடன் குறிப்பிடுக : ——————.

10. (அ). பாடசாலை அல்லது கல்லூரியை விட்டபின் செய்த தொழில், தொழிலிற் சேர்ந்த தேதியும் அதனைவிட்ட தேதியும் பெற்ற வேதனமும் : ——————.

(ஆ) அரசாங்க சேவையிலிருப்பின் இப்பொழுதுள்ள நிலையும் ஆண்டு வேதனமும் : ——————.

11. விசேட உரிமைக் கோரிக்கைகள், தகைமைகள், பயிற்சி அல்லது அனுபவம் பெற்றிருப்பின் அவைபற்றிய விபரங்கள் : ——————.

12. சொந்த வாழ்க்கையில் விண்ணப்பகாரருடன் நன்கு பழக்கமான (பொறுப்பானவர்களும் உறவினர் அல்லாதவர்களுமான) நடுவர் மூவரின் பெயர், முகவரி, பதவிப் பெயர் ஆகியன :—

1.——————.
2.——————.
3.——————.

13. இணைக்கப்படும் நற்சான்றிதழ்கள் வழங்கிய (உறவினர் அல்லாத) வர்களின் பெயர் ; பதவிப் பெயர் ஆகியன (அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்களின் படிகள், மூல இதழ்கள் அல்ல, இணைக்கப்படுதல் வேண்டும்) : ——————.

14. நீர் பணமுட்டின்றியிருக்கின்றீரா ? பணமுட்டிருப்பின் எவ்வளவு வரையில் இருக்கும் : ——————.

15. வேறு ஏதாவது விபரம் : ——————.

இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதிலுள்ள விவரங்களில் எதுவாயினும் பொய்யாகவோ பிழையாகவோ விருப்பது கண்டுபிடிக்கப்படின், அவ்வாறு கண்டு பிடிக்கப் படுவது தெரிவுக்கு முன்னராயின் தெரிவுக்குரிய என் தகைமைகளை இழப்பேன் என்பதையும், நியமனம் செய்யப்பட்ட பின் கண்டுபிடிக்கப் பட்டால் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

——————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி : ——————.

12-745/1—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885.

---

## அரசகரும மொழித் திணைக்களம்

### தற்காலிக மொழி பெயர்ப்பாளர் பதவி (தமிழ்)

அரசகரும மொழித்திணைக்களத்திலுள்ள தற்காலிக தமிழ் மொழி பெயர்ப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப் பங்களைக் கீழ்க் காட்டப்பட்டுள்ள மாதிரி எழுதி 1970, ஜனவரி 21 ஆம் தேதி அல்லது அதற்குமுன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

2. **வேதனம்.**—பதவிக்குரிய ஆண்டுவேதன அளவுத்திட்டம் : ரூபா 6,600—180, 240 ரூபா 9,240; ஆண்டுவேதனம் ரூபா 8,040 வருவதற்கு முன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

3. **நியமன நியதிகள்:**

(i) பதவி தற்காலிகமானது ; உபகாரவேதனத்திற்குரியதல்ல. பதவிக் குத் தெரிவு செய்யப்படுபவர், ஒரு மாதகால அறிவித்தலுடன் நிறுத்தப்படுதல் கூடும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் குறுகியகால அறிவித்தல் கொடுத்தும் நியமனத்தை ஏற்கத் தயாராயிருத்தல் வேண்டும்.

(iii) ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கு அல்லது தமிழிலிருந்து ஆங்கிலத் திற்கு மூல மொழிப்பெயர்ப்புச் செய்தல், பிற திணைக்களங்கள் அனுப்பும் தமிழ் மொழி பெயர்ப்புக்களை மீளவாய்தல், வேறு வழிகளில் அரசகரும மொழித் திணைக்களத்திற்கு உதவி செய்தல் ஆகியனவே மொழி பெயர்ப்பாளரின் கடமைகளாகும். மொழி பெயர்ப்பாளர் உயர்ந்த இலக்கியத்திறனுடையவராயிருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படும்.

4. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் தமிழையும் ஒரு பாட மாகவெடுத்துப் பட்டம் பெற்றவராக விருத்தல் வேண்டும் ;

அல்லது

(ஆ) பத்து ஆண்டு அனுபவம் பெற்ற தமிழ் மொழி பெயர்ப்பாள ராகவோ, தமிழ் எழுத்தாளர் அல்லது நூலாசிரியராகவோ விருப்பதுடன், பட்டதாரிகளுக்குக் குறையாத புலமைத் தகுதி யுடையவராயும் ஆங்கில அறிவு நிறையப் பெற்றவராயுமிருக்கிரு ரெனத் தேர்வுக்குழுவினர் திருத்திப்படும்படியாக எடுத்துக்காட்டக் கூடியவராயுமிருத்தல் வேண்டும் ;

(இ) 1970, ஜனவரி 21 ஆம் தேதியன்று 25 வயதுக்குக் குறையாதவரா யும் 50 வயதுக்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும். (இந்த வயதெல்லைகள் ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்குப் பொருந்தா) ;

(ஈ) சிறந்த நல்லொழுக்கமுடையவராயும் உடல் நலமுடையவராயு மிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர் பின்வருவனவற்றின் படிகளை (மூல இதழ்களை யல்ல) விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ; அல்லது (பிறப்பு பதியப்படாத விண்ணப்பகாரருக்கு) பதிவாளர் தலைமை அதிபதி வயது பற்றி வழங்கிய சிறப்புச் சான்றிதழ்.

**முக்கிய குறிப்பு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கான பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.

(ஆ) கல்வித்தகைமை/உயர் தொழிற்றகமை அல்லது கல்வி உயர் தொழிற்றகமைகள் ; பற்றிய சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரரின் தகைமைகள், குணம், இப்பதவி வகிப்பதற் குரிய தகுதி ஆகியனபற்றி அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள், (ஏற்கனவே அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பகாரர் இத்தேவையிலிருந்து விலக்களிக்கப்படுவர்).

**குறிப்பு.**—சான்றிதழ்களினதும் நற்சான்றிதழ்களினதும் படிகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.

6. ஒரு விண்ணப்பப் பத்திரமோ அது சம்பந்தமான கடிதமோ அஞ்சற் போக்குவரத்திற் காணமற்போய்விட்டது அல்லது தாமதப் பட்டுள்ளது என்னும் முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட் சார்த்திகள் விண்ணப்பங்களைக் கடைசித் திகதிவரை தாமதப்படுத்து வராயின் அது அவர்கள் பொறுப்பாகும். அரசாங்க சேவையிலுள்ள வர்களிடமிருந்து குறிப்பிட்ட தேதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள், அவ்விண்ணப்பங்கள் குறிப்பிட்ட தேதிக்கு முன் சம்பந்தப்பட்ட திணைக் களத் தலைவரிடம் கிடைக்கப்பெற்று, சுணக்கத்திற்குச் செல்லுபடியான காரணம் காட்டி, அதனை ஏற்றுக்கொள்ளுமாறு சிபாரிசும் செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. விண்ணப்பங்களை அல்லது அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளை அரசகரும மொழி அலுவல் ஆணையாளருக்கே விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும். இந்தத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோ கத்தரின் பெயருக்காயினும் அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், (II) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பங்கள் யாவும் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் தேதி கழிந்து மூன்று நாட்களுக்குள் அத்தகைய அறிவித்தலைப் பெருத விண்ணப்பகாரர் உடனே அரசகரும மொழி அலுவல் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டைப் பின்பற்றத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கு மாறு கேட்கும் உரிமையை இழந்தவராவர்.

பீற்றர் பி. அபயசேகரா,
அரசகரும மொழி அலுவல் ஆணையாளர்.

அரசகரும மொழித் திணைக்களம்,
22, றீட்சாலை, த. பெ. இல. 598,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 12 ந உ.

## அரசகரும மொழித் திணைக்களம்

### தற்காலிக மொழி பெயர்ப்பாளர் பதவி (தமிழ்)

1. முழுப்பெயர் (திரு./திருமதி/செல்வி) : ——————.
(பெரிய தனி எழுத்தில்)
(அ) குடும்பப் பெயர் : ——————.
(ஆ) பிற பெயர்கள் : ——————.

2. அஞ்சல் முகவரி : ——————.

3. (அ) 1970.1.21 ம் திகதி அன்று சரியான வயது :
ஆண்டு : ——————. மாதம் : ——————. நாள் : ——————.

(ஆ) பிறந்த தேதியும் இடமும் (பிறப்புச் சான்றிதழின்படி அல்லது அல்லது வயது பற்றிய சிறப்புச் சான்றிதழின்படி இணைக்கப் படுதல் வேண்டும்).

4. தேசிய இனமும், அது எவ்வாறு பெறப்பட்டது என்பதும் : ———.

5. (அ) விண்ணப்பகாரரின் தந்தையார் முழுப்பெயர் : ———.

(ஆ) அவருடைய பிறந்த தேதியும் இடமும் : ———.

(இ) அவருடைய தேசிய இனம் : ———.

6. விண்ணப்பகாரர் மணமானவரா, மணமாகாதவரா, வாழ்விழந்தவரா என்பது (மணமானவராயின் மணமான தேதியும், பிள்ளைகள் எத்தனையென்பதும்) : ———.

7. விண்ணப்பகாரர் பொதுக் கல்வி கற்ற பாடசாலைகளினதும், கல்லூரிகளினதும் பெயர்களும், அவற்றிற் சேர்ந்த தேதியும், அவற்றை விட்டு நீக்கிய தேதியும் : ———.

8. (அ) கல்வித் தகைமை/உயர் தொழிற்றகமை அல்லது கல்வி உயர் தொழிற்றகமைகள் ; தகைமைகள் பெற்ற தேதியும் வகுப்புப் பெற்றிருப்பின் எந்த வகுப்பு என்பதும் (ஆதாரமாகச் சான்றிதழ்களின் படிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) : ———.

(ஆ) தமிழ், ஆங்கிலம் ஆகிய பாடங்களுடன் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைகள் :—

தமிழ் : ———.

ஆங்கிலம் : ———.

9. பின் வருவன பற்றிய விபரங்கள் :—

(அ) மொழி பெயர்ப்பு வேலையில் அனுபவம் உண்டாயின் தொடர்பான தேதிகளுடன் குறிப்பிடுக :—

(ஆ) இலக்கியம் சம்பந்தமான வேலையில் அனுபவம் உண்டாயின் தொடர்பான தேதிகளுடன் குறிப்பிடுக :—

10. (அ) பாடசாலை அல்லது கல்லூரியை விட்டபின் செய்த தொழில் தொழிலிற் சேர்ந்த தேதியும் அதனைவிட்ட தேதியும் பெற்ற வேதனமும் ———.

(ஆ) அரசாங்க சேவையிலிருப்பின் இப்பொழுதுள்ள நிலையும் ஆண்டு வேதனம் ———.

11. விசேட உரிமைக் கோரிக்கைகள், தகைமைகள், பயிற்சி அல்லது அனுபவம் பெற்றிருப்பின் அவை பற்றிய விபரங்கள் ———.

12. சொந்த வாழ்க்கையில் விண்ணப்பகாரருடன் நன்கு பழக்கமான (பொறுப்பானவர்களும் உறவினர் அல்லாதவர்களுமான) நடுவர் மூவரின் பெயர், முகவரி, பதவிப் பெயர் ஆகியன :—

(i) . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(ii) . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

(iii) . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

13. இணைக்கப்படும் நற்சான்றிதழ்கள் வழங்கிய (உறவினர் அல்லாத) வர்களின் பெயர் ; பதவிப் பெயர் ஆகியன (அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்களின் படிகள், மூல இதழ்கள் அல்ல, இணைக்கப்படுதல் வேண்டும்) ———.

14. நீர் பணமுட்டின்றியிருக்கின்றீரா ? பணமுட்டிருப்பின் எவ்வளவு வரையில் இருக்கும் ? ———.

15. வேறு ஏதாவது விபரம் · ———.

இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதிலுள்ள விவரங்களில் எதுவாயினும் பொய்யாகவோ பிழையாகவோ விருப்பது கண்டுபிடிக்கப்படின், அவ்வாறு கண்டுபிடிக்கப்படுவது தெரிவுக்கு முன்னராயின் தெரிவுக்குரிய என் தகைமைகளை இழப்பேன் என்பதையும், நியமனம் செயயப்பட்ட பின் கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

———,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி · ———.

12-745/2—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885.

---

## அரசகரும மொழித் திணைக்களம்

### தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர் பதவி (தமிழ்)

அரசகரும மொழித் திணைக்களத்திலுள்ள ஒரு தற்காலிக (தமிழ்) ஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கீழ்க் காட்டப்பட்டுள்ள மாதிரி எழுதி 1970, ஜனவரி 21 ஆம் தேதி அல்லது அதற்கு முன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

2. **வேதனம்.**—பதவிக்குரிய ஆண்டுவேதன அளவுத்திட்டம் : ரூபா 6,600—180, 240 ரூபா 9,240. ஆண்டு வேதனம் ரூபா 8,040 வருவதற்கு முன் வினைத்திறமை காண் தடையுண்டு.

3. **நியமன நிபந்தனைகள்.**

(i) பதவி தற்காலிகமானது ; உபகார வேதனத்திற்குரியதல்ல. பதவிக்குத் தெரிவு செய்யப்படுபவர் வி. அ. உ. ச. நிதிக்கு உதவு தொகை கொடுத்தல் வேண்டும். பதவிக்குத் தெரிவு செய்யப்படுபவர், ஒரு மாதகால அறிவித்தலுடன் நிறுத்தப்படுதல் கூடும்.

(ii) தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் குறுகிய கால அறிவித்தல் கொடுத்ததும் நியமனத்தை ஏற்கத் தயாராயிருத்தல் வேண்டும்.

(iii) அரசகருமச் சொற்கள் சொற்றொடர்களுக்குச் சமமாக வழக்கிலுள்ள தமிழ்ச் சொற் பிரயோகங்களைச் சேர்த்து ஒழுங்கு செய்தல், இல்லாதவற்றிற்கு சமபதங்காணல், அதிகார பூர்வமான சொற்றொகுதியை உருவாக்கும் பொருட்டு இவற்றைத் தரப்படுத்தல் ஆகியனவே இவ்வுத்தியோகத்தரின் முக்கிய கடமைகளாகும்.

4. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளையுடையர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தில் தமிழையும் ஒரு பாடமாகவெடுத்துப் பட்டம் பெற்றவராக விருத்தல் வேண்டும் ; அல்லது,

(ஆ) தமிழ் எழுத்தாளராக அல்லது நூலாசிரியராக இருப்பதுடன், பட்டதாரிகளுக்குக் குறையாத புலமைத் தகுதியுடையவராயும் ஆங்கில அறிவு நிறையப் பெற்றவராயும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—சங்கீதம், பாளி, சிங்களம் என்ற மொழிகளில் அறிவு, கூடுதலான தகைமையாகக் கருதப்படும்.

(இ) 1970.1.21 ம் தேதி 25 வயதுக்குக் குறையாதவராயும் 50 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமுடையவராயும் உடல்நல முடையவராயுமிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பகாரர் பின்வருவனவற்றின் படிகளை (மூல இதழ்களையல்ல) விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும் ;

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் ; (**முக்கிய குறிப்பு**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்காய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) கல்வித்தகைமை/உயர்தொழிற்றகமை அல்லது கல்வி உயர் தொழிற்றகமைகள் ; பற்றிய சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரரின் தகைமைகள், குணம், இப்பதவி வகிப்பதற்குரிய தகுதி ஆகியனபற்றி அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள்.

**குறிப்பு.**—சான்றிதழ்களினதும் நற்சான்றிதழ்களினதும் படிகள் திருப்பியனுப்பப்படமாட்டா.

6. ஒரு விண்ணப்பப் பத்திரமோ அல்லது அது சம்பந்தமான கடிதமோ அஞ்சற் போக்குவரத்திற் காணாமற்போய்விட்டது அல்லது தாமதப்பட்டுள்ளது என்னும் முறைப்பாடு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களைக் கடைசித் திகதிவரை தாமதப்படுத்துவாராயின் அதன் விளைவுக்கு அவர்களே பொறுப்பாவர். அரசாங்க சேவையிலுள்ளவர்களிடமிருந்து குறிப்பிட்ட தேதிக்குப்பின் கிடைக்கும் விண்ணப்பங்கள், குறிப்பிட்ட தேதிக்கு முன் சம்பந்தப்பட்ட திணைக்களத்தலைவரிடம் கிடைக்கப்பெற்றிருப்பதுடன் அத்தலைவர், கணக்கத்திற்குச் செல்லுபடியான காரணம் காட்டி, அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு சிபாரிசும் செய்தாலன்றி, ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. விண்ணப்பங்களை அல்லது அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளை அரசாங்க மொழி அலுவல் ஆணையாளருக்கே விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும் ; இந்தத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தரின் பெயருக்காயினும் அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், (II) ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன ; அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பங்கள் யாவும் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் தேதி கழிந்து மூன்று நாட்களுக்குள் அத்தகைய அறிவித்தலைப் பெறாத விண்ணப்பகாரர் உடனே அரசகரும மொழி அலுவல் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டைப்

பின்பற்றத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்குமாறு கேட்கும் உரிமையை இழந்தவராவர்.

பீற்றர் பி. அபயசேகரா,
அரசகரும மொழி அலுவல் ஆணையாளர்.

அரசகரும மொழித் திணைக்களம்,
22, நீட் சாலை, த. பெ. இல. 598,
கொழும்பு 7,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 12 ந உ.

## அரசகரும மொழித் திணைக்களம்

### தற்காலிக ஆராய்ச்சி உதவியாளர் பதவி (தமிழ்)

1. முழுப் பெயர் : (திரு./திருமதி/செல்வி) : ————.
(பெரிய தனி எழுத்தில்)
(அ) குடும்பப் பெயர் : ————.
(ஆ) பிற பெயர்கள் : ————.
2. அஞ்சல் முகவரி : ————.
3. (அ) 1970.1.21 ம் திகதியன்று சரியான வயது :
ஆண்டு : ————. மாதம் : ————. நாள் : ————
(ஆ) பிறந்த தேதியும் இடமும் (பிறப்புச் சான்றிதழின்படி அல்லது வயது பற்றிய சிறப்புச் சான்றிதழின்படி இணைக்கப்படுதல் வேண்டும்) : ————.
4. தேசிய இனமும், அது எவ்வாறு பெறப்பட்டது என்பதும் : ————.
5. (அ) விண்ணப்பகாரரின் தந்தையார் முழுப் பெயர் : ————.
(ஆ) அவருடைய பிறந்த தேதியும் இடமும் : ————.
(இ) அவருடைய தேசிய இனம் : ————.
6. விண்ணப்பகாரர் மணமானவரா, மணமாகாதவரா, வாழ்விழந்தவரா என்பது (மணமானவராயின் மணமான தேதியும், பிள்ளைகள் எத்தனை யென்பதும்) : ————.
7. விண்ணப்பகாரர் பொதுக் கல்வி கற்ற பாடசாலைகளினதும், கல்லூரிகளினதும் பெயர்களும், அவற்றிற் சேர்ந்த தேதியும், அவற்றை விட்டு நீங்கிய தேதியும் : ————.
8. (அ) கல்வித்தகைமை/உயர் தொழிற்றகமை அல்லது கல்வி உயர் தொழிற்றகமைகள் ; தகைமைகள் பெற்ற தேதியும் வகுப்புப் பெற்றிருப்பின் எந்த வகுப்பு என்பதும், (ஆதாரமாகச் சான்றிதழ்களின் படிகள் இணைக்கப்படுதல் வேண்டும்) : ————.
(ஆ) தமிழ் ஆங்கிலம், பாளி, சங்கீதம், சிங்களம் ஆகிய பாடங்களுடன் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைகள் : ————.
தமிழ் : ————.
ஆங்கிலம் : ————.
பாளி : ————.
சங்கீதம் : ————.
சிங்களம் : ————.
(இ) வர்த்தமானி அறிவித்தலின்படி 4 (அ) அல்லது 4 (ஆ) எதன்படி நீர் தகைமையுடையவர் ? : ————.
9. இலக்கியம் சம்பந்தமான வேலையில் அனுபவம் உண்டாயின் தொடர்பான தேதிகளுடன் குறிப்பிடுக : ————.
10. (அ) பாடசாலை அல்லது கல்லூரியை விட்டபின் செய்த தொழில், தொழிலிற் சேர்ந்த தேதியும் அதனைவிட்ட தேதியும் பெற்ற வேதனமும் : ————.
(ஆ) அரசாங்க சேவையில் இருப்பின் தற்போதைய பதவி நிலையும் வேதனமும் : ————.
11. விசேட உரிமைக் கோரிக்கைகள், தகைமைகள், பயிற்சி அல்லது அனுபவம் பெற்றிருப்பின் அவை பற்றிய விபரங்கள் : ————.
12. சொந்த வாழ்க்கையில் விண்ணப்பகாரருடன் நன்கு பழக்கமான (உறவினர் அல்லாத பொறுப்புவாய்ந்தவர்கள்) நடுவர் மூவரின் பெயர், முகவரி, பதவிப் பெயர் ஆகியன :—
(i) . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
(ii) . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
(iii) . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
13. இணைக்கப்படும் நற்சான்றிதழ்கள் வழங்கிய (உறவினர் அல்லாத) வர்களின் பெயர், பதவிப் பெயர் ஆகியன (அண்மையிற் பெற்ற மூன்று நற்சான்றிதழ்களின் படிகள், மூல இதழ்கள் அல்ல, இணைக்கப்படுதல் வேண்டும்).
14. நீர் பணமுட்டின்றியிருக்கின்றீரா ? பணமுட்டிருப்பின் எவ்வளவு வரையில் இருக்கும் ? : ————.
15. வேறு ஏதாவது விபரம் : ————.

இந்த விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையுமென சரியானவையுமென இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதிலுள்ள விவரங்களில் எதுவாயினும் பொய்யாகவோ பிழையாகவோவிருப்பது கண்டுபிடிக்கப்படின் அவ்வாறு கண்டு பிடிக்கப்படுவது தெரிவுக்கு முன்னராயின் தெரிவுக்குரிய என் தகைமைகளை இழப்பேன் என்பதையும், நியமனம் செய்யப்பட்டபின் கண்டு பிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றிப் பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

தேதி : ————.

12-745/3—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885.

---

## இரத்தினபுரி மாவட்டத்தில் தொடம்பே பிரிவிற்கு பிறப்பு, இறப்பும் குறிவிற்றி கோறளை பிரிவிற்கு விவாக (பொது கண்டியர்) பதிவாளர் பதவி

தொடம்பே பிறப்பு இறப்பு, பதிவுப்பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சிலகாலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண் பெண் இரு பாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின், மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிற தராதரங்கள் நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள், இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும் கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும் உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும் கிராம நீதிமன்றங்களிலும் தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும் பிரசித்தமான வியாபார நிலையங்களிலும் கூட்டுறவு தாபன நிலையங்களிலும் இந்த பிரிவுக்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு தை மாதம் 16 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக எனக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

சி. சி. ரி. பொன்சேகா,
மேலதிகப் பெரும்பகுதிப் பதிவுகாரர்,
பெரும்பகுதிப் பதிவுகாரருக்காக.

இரத்தினபுரி மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
1969 ம் ஆண்டு மார்கழி மீ 10 ந உ.

12-834—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல.14,885

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெற்றிடங்கள்

#### போக்குவரத்து உத்தியோகத்தர்

7.11.69 திகதியிட்டு பிரசுரிக்கப்பட்ட 14,879 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியின் முதலாம் பகுதி இரண்டாம் பிரிவிற்கான மேற்கோள். " தகைமைகள் " என்ற தலைப்பில் கொடுக்கப்பட்ட (ட) பிரிவு இத்தால் நீக்கப்படுகிறது. விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 31.12.69 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

என். டீ. ஜயவீர,
மா அதிகாரி.

கொழும்பு 7.

12-857—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல.14,885

## சௌக்கிய சேவைப் பகுதி

சௌக்கிய சேவைப் பகுதியில் பிரதிச் சௌக்கிய சேவை அதிபதி (பொதுச் சௌக்கிய சேவை) பதவிக்கான விண்ணப்பங்கள் சௌக்கிய சேவை அதிபதியால் சௌக்கிய சேவைப் பகுதியில் உள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை ஏற்கும் கடைசித் திகதி 6.1.1970.

ஏனைய விவரங்களுக்கு இதன் கீழ் கையொப்பமிட்டிருப்பவருக்கு எழுதுக. கடிதப் போக்குவரத்துக்கள் இதன்கீழ் கையொப்பமிட்டிருப்பவரின் சொந்தப் பெயருக்கு அனுப்பப்படக்கூடாது.

(ஒப்பம்) டி. பி. குணசேகர,
சௌக்கிய சேவை அதிபதி.

சௌக்கிய சேவை அதிபதி கந்தோர்,
காலிமுகச் செயலகம்,
தபாற்பெட்டி 500,
கொழும்பு 1.
1969 ம் ஞூ டிசெம்பர் மீ 10 ந உ.

12–791—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## அகால மரண விசாரணையாளர் பதவி

பொலன்னறுவை பகுதியில் பொலனறுவை நகர சபைக்கு அகால மரண விசாரணையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்பவர்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் 1970 ம் ஆண்டு தை மாதம் 15 ம் திகதியன்று அல்லது முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பல் வேண்டும்.

2. இந்தப்பதவிக்கு குறிப்பிட்ட சம்பளம் வழங்கப்படமாட்டாது. ஒவ்வொரு விசாரணைக்கும் ரூபா 7.50 வீதம் செலவு வழங்கப்படும்.

3. **தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் அத்தாட்சிப் படுத்த வேண்டியவைகள் .—

(அ) 15.1.1970 அன்று 30 வயதிற்குக் குறையாதவர் என்றும் 60 வயதிற்கு மேற்படாதவரென்றும் ;
(ஆ) நற்குணம், தேகாரோக்கியம் உடையவரென்றும் ;
(இ) சம்பந்தப்பட்ட பட்டின சபை எல்லைக்குள் வதியும் நிரந்தரவாசி என்றும் ;
(ஈ) கீழ் குறித்த பரீட்சைகளில் ஒன்றில் தேறியவராகவும் இருத்தல் வேண்டும் ;

(1) 1925 தொடக்கம் 1944 வரை நடந்த ஆரம்ப பாடசாலை தாராதரப் பத்திரம், அல்லது ஆங்கில பாடசாலை தராதரப்பத்திரம், சிங்களம் தமிழ் உடன் கூடிய பாடமாக இருத்தல் வேண்டும், அல்லது கல்வி இலாகாக்களால் நடத்தப்பட்ட சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் கனிஷ்ட பாடசாலை தராதரப்பத்திரமாதல் வேண்டும் ;
(2) இதையடுத்து பரீட்சைகளும் ஏனைய உயர் பரீட்சைகளும்.

4. விண்ணப்பக்காரர்கள் விண்ணப்பத்துடன் அனுப்பவேண்டிய சாசனங்களின் நகல்கள் :

(அ) பிறப்புப்பதிவட்சாத்திப் பத்திரம் ;
(ஆ) கல்வி உயர் தராதரப் பத்திரம் ;
(இ) அண்மையில் பெற்ற இரு சான்றிதழ்கள், இதில் ஒன்று கிராம சேவையாளரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும் ;
(ஈ) நிரந்தரவாசி என்பதை நிரூபிக்கும் அத்தாட்சிப் பத்திரம் ;

5. **விண்ணப்பங்கள்** யாவும் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது.

அரசாங்க அதிபர்,
பொலன்னறுவைப் பகுதி.

அரசாங்க அதிபர் அலுவலகம்,
பொலன்னறுவை.
1969 ம் ஞூ டிசெம்பர் மீ 6 ந உ.

### *மாதிரி விண்ணப்பப் படிவம்*

**பொலன்னறுவைப் பகுதியில் பொலன்னறுவை நகர சபைக்கு அகாலமரண விசாரணையாளர் பதவி**

1. விண்ணப்பக்காரர்கள் முழுப்பெயரும் விலாசமும் : ————.
(தனி எழுத்துக்களில்)
(அ) முதற் பெயர் : ————.
(ஆ) ஏனைய பெயர்கள் : ————.
(இ) விலாசம் : ————.

2. நிரந்தர வசிப்பிடமும் அவ்விடத்தில் வசித்த கால எல்லையும் : ————.

3. 15.1.1970 ல் வயது :——— ஆண்டு : ——— மாதம் : ———. திகதி : ————.
(அ) பிறந்த இடமும் திகதியும் : ————.

4. விவாகமானவரா அல்லது தனித்தவரா ? ————.

5. கல்வித்தகைமைகள் : ————.

6. தற்போதுள்ள தொழில் : ————.

7. நிதி சம்பந்தமான சிக்கல்கள் உண்டா ? : ————.

8. முதிசங்களும், பெறுமதியும் அதன் விஸ்தீரணம் முதலியன : ————.

9. குற்றவியல் வழக்கு நடைமுறைச் சட்டக் கோவையின் பிரகாரம் தண்டிக்கப்பட்டவரா ? ————.

10. ஏனைய தகைமைகளும் விபரங்களும் : ————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் திட்டமானவை என்றும் யான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இவ்விபரங்களில் எவை தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் எனவும், தெரிவிற்குப்பின் கண்டுபிடிக்கப்படின் நட்ட ஈடு எதுவுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி : ————.

12–805—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885.

---

## அநுராதபுர மாவட்டத்தில் மஹா விலாச்சிய பிரிவிற்கு பிறப்பும், இறப்பும் நுவரகம் பளாத்தா பிரிவிற்கு விவாக (பொது கண்டியர்) பதிவாளர் பதவி

மஹாவிலாச்சிய பிரிவிற்குள் நிரந்தரமாக குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சில காலம் வசிக்கிறவர்கள், அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக் கூடியவர்கள், ஆண், பெண் இருபாலரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களைப் பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிறதாரதரங்கள், நிபந்தனைகள் ஆகியவிபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராமசேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சிச் சபை அலுவலங்ககளிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், பிரசித்தமான வியாபார நிலையங்களிலும், கூட்டுறவுத்தாபன நிலையங்களிலும், இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விண்ணப்பப் பத்திரங்களில் நிரப்புவதோடு 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 23 ம் திகதி யன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

4. 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19 ம் திகதி 14,872 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ம் திகதியைக்கொண்ட மேற்படி விஷயம் சம்மந்தப்பட்ட என்னுடைய விளம்பரம் ரத்துசெய்யப்படுகிறது.

ஐவன் சமரவிக்ரம,
மாவட்டப்பதிவாளர்.

அநுராதபுர மாவட்ட பதிவுகாரர் காரியாலயம்,
1969 ம் ஞூ டிசம்பர் மீ 9 ந உ.

12–825—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கமத்தொழில் திணைக்களம்

### கம சாதனு பாடசாலைகள்—பயிற்சி நெறிகள் 1970/71

இதன் கீழுள்ள நிரலில் எடுத்துக் காட்டப்படும் கம சாதனு பாடசாலைகளில் 1970/71 க்குரிய அவற்றின் கல்விப் பயிற்சி நெறிகள் 1970 ம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 25 ஆம் தேதியன்று ஆரம்பமாகும். ஒவ்வொரு பாடசாலைக்கும் தெரிவு செய்யப்படும் மாணுக்கரின் மாவட்டம் யாது என்பதும் சொல்லப்பட்ட நிரலில் எடுத்துக் காட்டப்படுகின்றது. மாணுக்கர் வதியும் மாவட்டத்துக்குரிய மாவட்டக் கமத்தொழில் விருத்தி உத்தியோகத்தருக்கு 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பம் அனுப்புதல் வேண்டும்.

கம சாதனு பாடசாலைகளில் அளிக்கப்படும் பயிற்சி நெறிகள் கமத்தொழிலைச் சீவனுதாரமாகக் கைக்கொள்ளத் தீர்மானித்துள்ள மாணவ, மாணவிகட்கே முக்கியமானவை. பயிற்சி நெறிகளை நிறைவேற்றும் மாணுக்கருக்கு இலங்கை அரசாங்கம் வேலை அளித்தலை உறுதிப் படுத்தவோ வேலை வாய்ப்பு எதனையும் எடுத்துக் காட்டவோ இல்லை என்பதை விண்ணப்பக்காரர் பூரணமாக உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

விண்ணப்பக்காரர் பின்வரும் தகைமைகளை உடையராகுதல் வேண்டும் :—

(1) 1970 ம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 25 ஆம் தேதியில் அவர்கள் 17 வயதுக்கும் 24 வயதுக்குமிடையினராய் இருத்தல் வேண்டும்.

(2) அவர்கள் க. பொ. த. பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, எண்கணிதம்/கணிதம் ஆகிய பாடங்களினும் மேலும் குறைந்த பட்சம் நான்கு பாடங்களினும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பதாரர் விவாகம் செய்யாதவராக இருத்தல் வேண்டும். க. பொ. த. பரீட்சையில் விவசாயப் பாடத்திலும், மற்றும் விஞ்ஞான பாடங்களிலும் சித்தியெய்தியுள்ள, இளைஞர் விவசாயக் களரிகளில் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ள பயிற்சி முடிந்தவுடன் கமத்தொழில் ஈடுபட வாய்ப்பும் சந்தர்ப்பமுமுள்ள விண்ணப்பக்காரர் முன்னுரிமையுடையோராவர். இளைஞர் விவசாயக் களரிகளில் உறுப்பினர் நேர்முகப் பரீட்சைப் போது உரிய வட்டார கமத்தொழிற் போதனுசிரியரால் சான்று படுத்தப்பட்ட தொழிற் பதிவேடுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்படும் மாதிரிப் படிவம் போல விண்ணப்பங்கள் எழுதப்படல் வேண்டும். விண்ணப்பகாரர் வசிக்கும் வட்டாரத்துக்குரிய மாவட்ட கமத்தொழில் விருத்தி உத்தியோகத்தருக்கு 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15 ந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்கள் கிடைத்தல் வேண்டும்.

| ஆடவர் பாடசாலை | போதனு மொழி | மாவட்டம் |
|---|---|---|
| 1. அனுராதபுரம் .. | சிங்களம் .. | அனுராதபுரம், பொலனறுவை, வவுனியா, திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் |
| 2. அம்பேபுச .. | சிங்களம் .. | கேகாலை, கொழும்பு, களுத்துறை, இரத்தினபுரி, காலி |
| 3. பெல்விகார(டம்பல்ல) | சிங்களம் .. | மாத்தளை, கண்டி, நுவரெலியா |
| 4. பிபிலை .. | சிங்களம் .. | மட்டக்களப்பு, மாத்தறை, பதுளை, அம்பாறை, அம்பாந்தோட்டை, மொனருகலை |
| 5. வாரியபொலை .. | சிங்களம் .. | குருநாகல், புத்தளம்/சிலாபம், கேகாலை |
| 6. கிளிநொச்சி .. | தமிழ் .. | யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை |
| 7. வவுனியா .. | தமிழ் .. | மேற்கண்ட மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் |
| மகளிர் பாடசாலை | | |
| 1. வல்பிற்ற .. | சிங்களம் .. | எல்லா மாவட்டங்களும் |
| 2. திருநெல்வேலி .. | தமிழ் .. | எல்லா மாவட்டங்களும் |

பி. ரி. ஜினேந்திரதாசா,
பதில் கமத்தொழில் பணிப்பாளர்,
(கல்வியும் கமத்தொழிற் பண்ணையும்)

கமத்தொழில் திணைக்களம்,
பேராதனை,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 19 ந் உ.

## விண்ணப்பப் படிவம்

.......................... ஆடவர்/மகளிர் சாதனு கமப் பாடசாலையில் சேருதற்கான விண்ணப்பம்—1970/71

1. (அ) விண்ணப்பதாரரின் பெயரும் விலாசமும் :————.
(ஆ) விண்ணப்பதாரர் நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :————

2. (அ) பிறந்த தேதி :————.
(ஆ) 25.4.60 ல வயது :—
ஆண்டுகள்........ மாதங்கள்........ தினங்கள்......

3. (அ) பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் பெயரும் விலாசமும்:—.
(ஆ) அன்னாரின் தொழில் :————.

4. பெற்றோரிடம் அல்லது பாதுகாவலரிடமுள்ள நிலப்பரப்பு :—
(அ) மேட்டு நிலம் (ஏக்கர்) :————.
(ஆ) வயல் நிலம் (ஏக்கர்) :————.
(நிலச் சொந்த உரிமையை அத்தாட்சிப் படுத்தக் கிராம சேவையாளரின் சான்றிதழ் இணைத்தல் வேண்டும்)

5. சகோதர/சகோதரிகள் எத்தனை :————.

6. கடைசியாகச் சித்தியடைந்த பரீட்சை :————.

7. சித்தியடைந்த பாடங்கள் :—
(அ) .................... (உ) ....................
(ஆ) .................... (ஊ) ....................
(இ) .................... (எ) ....................
(ஈ) .................... (ஏ) ....................

8. கடைசியாகப் படித்த பாடசாலை :————.

9. விண்ணப்பக்காரர் ஈடுபட்டிருந்த பாடத்திட்டங்களிலமையாத சேவைகள் :————.
(கடைசியாகப் படித்த பாடசாலையின் அதிபரிடமும் மற்றும் இருவரிடமும் பெற்றுள்ள நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்குக).

10. இளைஞர் விவசாயக் கழக உறுப்பினரா ? அப்படியானல் உமது களகத்தின் பெயரையும், விலாசத்தையும் அதன் பதிவு இலக்கத்தையும் கூறுக :————.

11. இளைஞர் விவசாயக் கழக உறுப்பினராயிருந்து கைக்கொண்ட முயற்சிகளையும் திட்டங்களையும் கூறுக :————.

12. கமச்செய்கையில் அனுபவமுண்டா ? :————.

13. விவசாயப் பயிற்சி பெற்றுக்கொள்ள ஆதாரமாயுள்ள பிற தகமைகளைக் கூறுக :————.

மேலே குறிப்பிட்ட விபரங்கள் யாவும் சரியும் உண்மையும் ஆனவையென உறுதிப்படுத்துகின்றேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :————.

12–756—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## கைத்தொழில் நிலையக் கூட்டுத்தாபனம்

கண்டி, பல்லேகலை கைத்தொழில் நிலையத்தில் அமைந்துள்ள கட்டிடம் ஒன்றினை இடித்தழிப்பதற்கும், அப்புறப்படுத்துவதற்கும், கொள்வனவு செய்வதற்குமான கேள்விப் பத்திரங்கள் 10.1.70 ந் திகதி முற்பகல் 10 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

முறையே மீளக் கொடுக்கக் கூடியனவும் மீளக் கொடுக்கப்படாதனவுமான 100 ரூபா 5 ரூபா பெறுமதியான முற்பணத்தை, கொழும்பு 7 விஜயராம மாவத்தை 30 ம் இலக்கத்திலுள்ள இவ்வலுவலகத்தில் செலுத்தி கேள்விப்பத்திர விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பல்லேகலை கைத்தொழில் நிலைய அத்தியட்சரின் அனுமதியுடன், இக் கட்டிடத்தைக் கிழமை நாட்களில் மு. ப. 9.00 மணிக்கும் பி. ப. 4.00 மணிக்கு மிடையில் பார்வையிடலாம்.

முகாமையாளர்.

12-1049—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

வாழைச்சேனையிலுள்ள கிழக்கிலங்கை கடதாசி ஆலைக்கு 1,700 நீள்தொன் சுருள்களிலுள்ள கிறுப்ற் கடதாசி வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1970 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 12 ந் திகதி பி. ப. 2 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் மூடப்படும்.

கேள்விப்பத்திரப் படிவங்களும் மற்றும் ஏனைய விபரங்களும் பொறுப்பு முதல்வர்கள்/வழங்குபவர்களின் பெயர்களும் விலாசங்களும் அடங்கிய விண்ணப்பமூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்.
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 5 ந் ட.

12-858/2—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### தாள்களாகவுள்ள நிறப் பத்திரிகைக் கடதாசிக்கான கூறுவிலைகள்

22½″ × 35″/50-52 ஜி எஸ் எம் அளவுடையதான தாள்களாகவுள்ள இதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தொகைகள் நிறப் பத்திரிகைக் கடதாசி வழங்குவதற்கு முதல்வர்களிடமிருந்து இலங்கை ரூபாயில் விலைக் குறிப்பீடுகள் (கொள் விலையும் கப்பற் கேழ்வும்) கொழும்பில் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| ஓல்ட் கோல்ட் நிறம் | .. | 10 நீள் தொன் |
| பச்சை நிறம் | .. | 10 நீள் தொன் |
| நீல நிறம் | .. | 10 நீள் தொன் |
| சிகப்பு நிறம் | .. | 10 நீள் தொன் |

(நாணயமாற்று £ 1=ரூபா 14.2857 யு எஸ் $ 1.00=ரூபா 5.95)

ஒவ்வொரு சிப்பமும் 10-12 றீம்களாக கட்டுப்பலகையில் கட்டப்பட்டு 1970 பெப்புருவரி மாதத்தில் இக் கடதாசி அனைத்தையும் ஒரே முறையில் கப்பலில் அனுப்பப்படல் வேண்டும்.

1970 ம் ஆண்டு சனவரி மாதம் 5 ந் திகதி பி. ப. 2.00 மணிக்கு விலைக் குறிப்பீடுகள் முடிவடையும்.

எழுத்திலான விலைக் குறிப்பீடுகள் முத்திரையிடப்பட்ட உறையில் " நிறப் பத்திரிகைக் கடதாசி வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் " எனக் குறிப்பிடப்பட்டு, தலைவர், கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத் தாபனம், 356, யூனியன் பிளேஸ், கொழும்பு 2, இலங்கை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

கடல் கடந்த தந்தி மூலம் அனுப்பப்படும் விலைக் குறிப்பீடுகள் " ஈபெம் கோர்ப் " கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

இணைப்படியுடனான மாதிரிகள், விலைக் குறிப்பீடுகள் முடிவடையும் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக இக் காரியாலயத்தில் கிடைக்கப் பெற வேண்டும்.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 4 ந் ட.

12-858/3—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### தாள்களாகவுள்ள பத்திரிகைக் கடதாசிக்கான கூறுவிலைகள்

22½″ × 35″/50—52 ஜி எஸ் எம் அளவுடையதான தாள்களாகவுள்ள 1,000 நீள் தொன் வெண்ணிறப் பத்திரிகைக் கடதாசி வழங்குவதற்கு முதல்வர்களிடமிருந்து இலங்கை ரூபாயில் விலைக்குறிப்பீடுகள் (கொள் விலையும் கப்பற் கேழ்வும்) கொழும்பில் கோரப்படுகின்றன.

ஒவ்வொரு சிப்பமும் 10—12 றீம்களாக கட்டுப்பலகையில் கட்டப்பட்டு 1970 யூன் மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் 200 தொன்கள் கப்பற் சுமையாக அனுப்பப்படல் வேண்டும்.

(நாணயமாற்று £ 1=ரூபா 14.2857; யுஎஸ் டொலர்ஸ் $ 1.00=ரூபா 5.95)

1970 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 10 ம் திகதி பி. ப. 2.00 மணிக்கு விலைக்குறிப்பீடுகள் முடிவடையும்.

எழுத்திலான விலைக் குறிப்பீடுகள் முத்திரையிடப்பட்ட உறையில் " வெண்ணிறப் பத்திரிகைக் கடதாசி வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் " எனக் குறிப்பிடப்பட்டு, தலைவர் கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம், 356 யூனியன் பிளேஸ், கொழும்பு 2, இலங்கை என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

கடல்கடந்த தந்தி மூலம் அனுப்பப்படும் விலைக் குறிப்பீடுகள் "ஈபெம் கோர்ப் " கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

இணைப்படியுடனான மாதிரிகள், விலைக் குறிப்பீடுகள் முடிவடையும் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக இக் காரியாலயத்தில் கிடைக்கப் பெற வேண்டும்.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

356, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 4 ந் ட.

12-858/4—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மன்னார் உப பகுதி

நிதியாண்டு 1969/70 மன்னார் உபபிரிவில் பொருட்களை ஏற்றியிறக்கல் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் தை மாதம் 2 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி வரைக்கும் வடபகுதி பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர், வவுனியா அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசன பொறியியலாளர் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் அவர்களிடமிருந்து பெறும் கேள்விப்பத்திரங்கள் பிரதியோடு விண்ணப்பிக்க வேண்டும்.

20.12.69 தொடக்கம் 28.12.69 வரை கேள்விப்பத்திரங்கள் இவ்விலாகாவில் ரூபா 15,000 அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டவராயும் அத்துடன் சொந்த வாகனமுடையவருக்கும் எந்தக் கச்சேரியிலாகுதல் அல்லது மேற்குறிப்பிட்ட கந்தோரில் ரூபா 25 கட்டுப்பணமாக கட்டிய பற்றுச்சீட்டு காட்டுபவருக்குமே வழங்கப்படும்.

க. சிவசுப்பிரமணியம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
மன்னார் உப பகுதி.

முருங்கன்,
5.12.69.

12–764—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கண்டி, உபபிரிவு " ஏ "

புதிய பல்லேகெல நகர கைத்தொழில் பகுதியிலும் குடியிருப்புப் பகுதியிலும், ரோட்டுப் போடுவது சம்பந்தமாக கீழே கொடுக்கப்பட்ட வேலைகட்கு கேள்விப்பத்திரங்கள், குண்டசாலை மத்திய பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் 9.1.1970 முற்பகல் காலை 10 மணிவரை ஏற்கப்பட்டு உடனே திறக்கப்படும்.

2. நீர்ப்பாசன, பொதுவேலை, நிலம் அபிவிருத்தித் திணைக்களத்தில், கீழே சொல்லப்பட்டதற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் கூட்டுறவுச் சங்கங்களும்,கிராமமுன்னேற்றச் சங்கங்களும் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையன.

| | பாதையின் பெயர் | நீளம் | பதிவுத் தொகை | கேள்விக் கட்டணம் |
|---|---|---|---|---|
| | | செயின் | ரூபா | ரூபா |
| 1. | EF | 45 | 150,000 | 200 |
| 2. | KE (KL&LE) | 38 | 150,000 | 200 |
| 3. | LG | 38 | 150,000 | 200 |
| 4. | CI | 38 | 150,000 | 200 |
| 5. | CD | 60 | 150,000 | 200 |
| 6. | HD&DE | 55 | 150,000 | 200 |
| 7. | XYZ | 53 | 150,000 | 200 |
| 8. | WY | 37 | 150,000 | 200 |

3. இக்கேள்விப்பத்திரங்கள் இரண்டு கொப்பியில் அனுப்பப்படவேண்டும். இக்கேள்விக் குரிய வெற்றுப் பத்திரங்களை கண்டி, மாத்தளை, கலலக்கை நுவரஎலியா, நீர்ப்பாசனக் கந்தோர்களில் 7.1.70 பிற்பகல் 4.30 மணிக்கு முன் பெற்று மேற்கூறிய நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயங்கள் ஒன்றில் அல்லது ஒரு கச்சேரியில், கேள்விக் கட்டணமாகிய ரூபா 200 கட்டிய பற்றுச்சீட்டுடன் கேள்விகளை இரு பிரதியில் சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்வியாளராக முன்வருவோர், தங்கள் பதிவுப் புத்தகத்தைக் காணபித்து கேள்விக்குரிய வெற்றுப் பத்திரத்தைக் கோர வேண்டும்.

4. இத்திணைக்களத்தால் சாமான்கள் ஒன்றும் தரப்படமாட்டாது.

5. குண்டசாலை, பொறியியலாளரின் காரியாலயத்தில் ரோட்டுகளின் படம், கந்தோர் நேரத்தில் பார்வையிடலாம்.

ஏ. ரீ. ஜே. டீ. பின்ரோ,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கண்டி உ. பி.

நீர்ப்பாசனக் காரியாலயம்,
குண்டசாலை,
1969 ம் ஆண்டு டிசம்பர் 5 உ.

12–771—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## விவசாய உணவு அமைச்சு

### பழைய புதினத்தாள்களும் கார் டயர்களும் டியூப்புக்களும் விற்பனை

பின்வரும் பொருட்களின் விற்பனைக்கான கேள்விகள் விவசாய, உணவு அமைச்சின் கேள்விச் சபைத் தலைவரால் 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ந் திகதி முற்பகல் 10 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

| விடயம் | விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | பழைய புதினத்தாள்கள் | 5அந்தர் |
| 2 | பழைய ஹன்சாட் | 2 அந்தர் |
| 3 | பழைய வர்த்தமானப் பத்திரிகைகள் | 5 அந்தர் |
| 4 | டயர் மிச்சலின் | 38 165 × 15 |
| 5 | டியூப்புக்கள் மிச்சலின் | 22 165 × 15 |

2. இப்பொருட்களை இல. 330 யூனியன் பிளேஸ், கொழும்பு–2ல் உள்ள அமைச்சு அலுவலகத்தில் 19.12.69 தொடக்கம் 27.12.69 வரைக்கும் வழமையான அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்.

3. எழுதப்பட்ட கேள்விகள் பொறியிடப்பட்டு பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் "பழைய புதினத்தாள்கள் முதலியவை கொள்வனவு செய்வதற்கான கேள்விகள்" என உறையில் குறிப்பிட்டு தலைவர், கேள்விச் சபை, விவசாய உணவு அமைச்சு, இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். அல்லது விவசாய உணவு அமைச்சு அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

4. கேள்வியாளர்கள் அவர்கள் கொள்வனவு செய்வதற்கு விரும்பும் விடயங்களுக்கு கேள்விகள் அனுப்பலாம். விடயம் 1–3 க்கான கேள்வி அந்தர்களிலும் விடயம் 4 க்கும் 5 க்கும் ஆன கேள்வி முழுத்தொகைக்குமாக இருத்தல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் 28.12.69 முற்பகல் 10 மணிக்குத் திறக்கப்படும். கேள்வியாளர்கள் விரும்பியவிடத்து திறக்கப்படும் நேரத்தில் சமுகமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

6. தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளர் அவருடைய கேள்வி ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 7 நாட்களுள் கேள்வித்தொகை முழுவதையும் செலுத்துவதுடன் அப்படிப் பணம் செலுத்தப்பட்ட 2 நாட்களுள் பொருட்களை அகற்ற வேண்டுமெனவும் வேண்டப்படுவர்.

டி. கி. ஈ. எஸ். சிரிமான்ன,
நிரந்தரச் செயலாளருக்காக.

விவசாய, உணவு அமைச்சு,
330, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.
1969.12.12.

12—762—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

## கமத்தொழில் திணைக்களம்

### அரசாங்கப் பண்ணைகளில் ஐ ஆர் 8 நெல் அறுவடை செய்தல், கொண்டு செல்லுதல், சூடு வைத்தல் ஆகிய வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன

மேற்கூறப்பட்ட விடயம் சம்பந்தமாக சீல் வைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1970.1.9 ஆம் திகதி மு. ப. 10. மணி வரையும் யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (பண்ணை முகாமையும் ஆக்கமும்) கமத்தொழில் அதிகாரியினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கீழ்க் காணப்படும் பண்ணைகளில் **ஐஆர் 8** நெல் அறுவடை செய்தல், கொண்டு செல்லுதல், சூடுவைத்தல். நெல் அறுவடை செய்து முடிவடையச் செய்யும் காலம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது.

| | நெல் அறுவடை செய்யும் தினம் | இனம் | ஏக்கர் | நெல் அறுவடை செய்து முடிக்க வேண்டிய தினம் |
|---|---|---|---|---|
| பரந்தன் பண்ணை .. | 15.2.1970 .. | ஐஆர் 8 .. | 14 (பகுதி 1) .. | 20.2.70 |
| | 20.2.1970 .. | ஐஆர் 8 .. | 4 (பகுதி 2) .. | 22.2.70 |
| | 22.2.1970 .. | ஐஆர் 8 .. | 3 (பகுதி 3) .. | 23.2.70 |
| முருங்கன் பண்ணை .. | 14.2.1970 .. | ஐஆர் 8 .. | 14 (பகுதி 1) .. | 17.2.70 |
| | 17.2.1970 .. | ஐஆர் 8 .. | 1 (பகுதி 2) .. | 18.2.70 |
| கிளிநொச்சிப் பண்ணை .. | 18.2.1970 .. | ஐஆர் 8 .. | 10 .. | 22.2.70 |

பண்ணை அதிபரினாலோ அல்லது அவரது பிரதிநிதியாலோ குறிப்பிடும் இடத்திலேயே சூடு வைத்தல் வேண்டும். எந்த ஒரு நிலையிலும் நென்மணிகளுக்கு ஊறு நிகழ்வதற்கும் நட்டம் ஏற்படுவதற்கும் இடம் கொடுக்கக் கூடாது. நெல் அறுவடை செய்ததன் பின்பு வயலில் மீதியாக இருக்கும் அடிக்கட்டை 3 அங்குலத்திற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

குறிப்பிடப்பட்ட காலத்துக்குள் நெல் அறுவடை செய்து முடிப்பதுடன், குறிப்பிடப்பட்ட தினத்தின் பின் தாமதமாகும் ஒவ்வொரு நாளும் தண்டனையாக நெற்பயிருக்கு ஏற்படும் நட்டத்திற்குச் சமமான அபராதம் கொந்தராத்துக் காரரினால் செலுத்தப்பட்ட வேண்டும். (பயிரின் நட்டம் கணக்கிடுவது, நெல் அறுவடை செய்யும் கடைசித் தினத்திற்குப் பின்பு நெல் அறுவடை செய்யப்படாதிருக்கும் எல்லா ஏக்கருக்கும், ஒவ்வொரு ஏக்கருக்கும் நாளுக்கு 3 புசல் வீதமாகும்) எல்லா நடவடிக்கைகளும் பண்ணை முகாமையாளர் திருப்தி அடையும் வண்ணம் இருத்தல் வேண்டும். குறைந்த பட்சம் நாள் ஒன்றுக்கு 4 ஏக்கரில் நெல் அறுவடை செய்தல் வேண்டும். மழையினால் பங்கம் ஏற்படாது விடின் அறுவடை செய்த தினத்தில் இருந்து இரண்டு நாட்களுக்குள் சூடு வைத்தல் வேண்டும். மழையினால் பாதிப்பு ஏற்படுமெனக் கண்டால் பண்ணை அதிபர் எவ்விடத்தில் சூடு வைத்தல் வேண்டும் என்பதைத் தீர்மானிப்பார். கொந்தராத்துக்காரரின் கவலையீனத்தினாலோ அல்லது அசட்டையினாலோ நென்மணிகளுக்கு ஊறு விளையுமாயின் அச் சேதத்தின் பெறுமதி கேள்விக்காரரிடம் இருந்து அறவிடப்படும்.

இது சம்பந்தமாக அறவிடும் தொகை ஒவ்வொரு இனத்திற்கும் வெவ்வேறாக ஒரு ஏக்கருக்கு என்ற அடிப்படையிலேயே குறிப்பிடுதல் வேண்டும். தெரிந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர் முழு ஏக்கரையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்கத் தயாராய் இருத்தல் வேண்டும். பண்ணை அதிபரினதோ அல்லது அவரது பிரதி நிதியினதோ அறிவுறுத்துரைக்கு அநுகூலமாக அவரினால் ஒவ்வொரு நிலப் பகுதிக்கும் அல்லது பங்குக்குமாக நியமிக்கப்பட்ட தினத்தினுள் வேலையைச் செய்து முடித்தல் வேண்டும்.

2. மேற்கூறப்பட்ட நிலையங்களிலும் செய்யும் வேலைகள் சேவைகளுக்கு வெவ்வேறான கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் ரூபா 10/– வைப்புப்பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

3. யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) யால் கொடுக்கப்படும் விண்ணப்பப் படிவங்களிலேயே கேள்விப்பத்திரங்கள் கோருதல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் இரு பிரதிகளில் தயாரித்துக் கையொப்பமிட்டு சீல்போட்ட தபால் உறையுள் வைத்து, கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.) கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பாவிட்டால் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோருக்கு (ப. மு. ஆ.) கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ நேரில் சென்று சீல் வைத்த உறைகளை இதற்கே வைக்கப்பட்டிருக்கும் பட்டியலில் இடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்களடங்கிய தபாலுறையின் இடதுபுற மேல் மூலையில் வேலையின் பெயர்க் குறிப்பு "..................., (சேவையின் பெயரும் நிலையமும் கொடுக்கப்பட வேண்டும்) ஆகிய வேலைகளுக்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட வேண்டும். கேள்விப் பத்திரங்களைத் திறந்து பார்த்தபின் அவை கிடைத்தமை பற்றிய உறுதிப் பத்திரங்கள் ஒவ்வொரு கேள்விக்காரருக்கும் அனுப்பப்படும். கேள்விப்பத்திரம் கோரும் முடிவுத் திகதிக்குப் பின்னர் நான்கு நாட்களுக்குள் உறுதிப்பத்திரம் கிடைக்காத கேள்விக்காரர் யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில், கமத்தொழில் அதிகாரியுடன் (ப. மு. ஆ.) தொடர்பு கொள்ள வேண்டும்.

4. ஒவ்வொரு கேள்விப் பத்திரத்திற்கும் வைப்புப்பணமாகக் கட்டிப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டைக் கொடுத்து முடிவுத் திகதிக்கு முன்தினம் பகல் 12 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ள முடியும். கேள்விப்பத்திர வைப்புப் பணம் எச்செயலகங்களிலும் அல்லது கமத்தொழில் இலாகா பேராதனையில் செலுத்துதல் வேண்டும். வேலை ஒப்பந்தம் கைச்சாத்தானதும் வைப்புப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவித்தல் கிடைத்த 10 நாட்களுக்குள் கேள்விக்காரர் வேலை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தவறின் தனது கேள்விப்பத்திர வைப்புப்பணத்தை இழப்பதுடன் தாமத வேலை செய்யும் கொன்தராத்துக் காரர்களின் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்படுவதுடன் இது சம்பந்தமாக எந்தவிதக் கடிதத் தொடர்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள மாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர்களினால் கொடுக்கப்படும் திகதிகளில் வேலைகளை ஆரம்பித்து குறிப்பிட்ட காலத்திற்குள் பூர்த்தியாக்கத் தவறின் ஒப்பந்தத்தில் கூறியவாறு நஷ்டஈடு செலுத்துவதற்கு ஆளாவார்.

5. கேள்விப்பத்திரகாரர் விரும்பின் கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் பிரசன்னமாகலாம். யாழ்ப்பாணம் கமத்தொழிற் கந்தோரில் (ப. மு. ஆ.) கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். திறக்கப்படும் நேரமும் திகதியும் கேள்விப்பத்திர முடிவுத் திகதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

6. அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் (இரு பிரதிகளில்) அல்லது அதில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமையாத விண்ணப்பங்கள் யாவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்வித் தொகையும் மொத்தமும் மையினால் தெளிவாக எழுதப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்களில் அழித்து எழுதுதலும் பிழை திருத்தங்களும் கேள்விப்பத்திரக் காரரால் முதலெழுத்துக் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும்.

7. கேள்விப்பத்திரக்காரர் தமது பூரணமான பெயர், முகவரி ஆகியவற்றை பெரிய எழுத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும்.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதுடன் கேள்விப்பத்திரத்தின் மொத்தத் தொகையின் 5 வீதத்தை பிணைப்பணமாகக் கமத்தொழில் அதிபரிடம் செலுத்துதல் வேண்டும். இப்பணம் கொந்த்ராத்து வேலையைச் சரிவரச் செய்து முடித்த பின்னரே திருப்பித்தர முடியும். தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் வேலையைச் சரிவரச் செய்து முடிக்காவிடின் அவருடைய பிணைப்பணம் அரசாங்கத்தைச் சேருவதுடன் அவருடைய பெயர் கொந்தராத்துக்காரர்களின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும்.

9. ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் பொழுது ஒப்பந்தப் பத்திரத்தில் ஒட்டப்படும் முத்திரைக்கான செலவைக் கேள்விப்பத்திரக்காரர் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

10. கொந்தராத்துக்காரர் தமது வேலையைத் திருப்திகரமாகச் செய்யாமலோ குறிப்பிட்ட தினத்திற்குள் பூர்த்தியாக்காமல் இருந்தாலோ அவரது கொந்தராத்தை முடிவுறச் செய்யும் அதிகாரம் கமத்தொழில் அதிபருக்குண்டு. இப்படியான சந்தர்ப்பத்தில் கொந்தராத்துக்காரரின் செலவில் அவ்வேலையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு வேறுவித ஒழுங்குகள் செய்வதற்கு கமத்தொழில் அதிபர் உரிமையுடையவராவார்.

11. கொந்தராத்துக்காரர் கோரும் கேள்விகள் முழுதையுமோ சிலபகுதிகளையோ அனுமதிக்கவும் நிராகரிக்கவும் அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

12. கேள்விப்பத்திரக்காரர் கேள்விகள் முடிவு திகதியில் இருந்து மூன்று கிழமையை கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளும் தினமாக வைத்திருத்தல் வேண்டும்.

13. தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரக்காரர் பயிற்றப்பட்ட பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்துதல் வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்துதல் வேண்டும்.

இந்நிபந்தனைகளுள் ஏதாவது ஒன்றுக்கு அமையாது வேலை செய்யும் கேள்விப்பத்திரக்காரர் கொந்தராத்து வேலை நிராகரிக்கப்படுவதற்கு ஆளாவார். விசேட சூழ்நிலையில் கமத்தொழில் உணவுற்பத்தி மந்திரியின் எழுத்துமூல அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் மாத்திரமே இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்த முடியும்.

எழுத்து மூலம் அங்கீகாரம் பெறாது இலங்கையரல்லாத ஒருவரை வேலைக்கமர்த்துவது அவரது கொந்தராத்து வேலையை இழப்பதற்கு வழிகோலும்.

" இலங்கையர் " என்னும் பதம் இலங்கையில் வம்சாவழியினரை அல்லது பதிவு செய்யப்பட்ட ஒருவரைக் குறிக்கும்.

அமைய ஊழியர்களின் தற்போதைய அல்லது வருங்காலத்தில் செய்யப்படும் சம்பள சட்ட திட்டங்களுக்கமைய இக்கொந்தராத்தில் வேலை பார்க்கும் கூலியாட்களின் சம்பளங்கள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். கமத்தொழில் அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட கமத்தொழில் இலாகாவில் வேலைபார்க்கும் ஓர் உத்தியோகத்தர் கொந்தராத்துக்காரரின் வேலை சம்பந்தமான புத்தகங்கள், சம்பளப்பட்டியல், வரவுப்பட்டியல் ஆகிய தஸ்தாவேஜுகளைப் பார்வையிடுவதற்குக் கோரப்படுவர்.

14. எல்லா அறிவித்தல்களும் கேள்விப்பத்திரக்காரருக்கு நேரடியாக, அல்லது தபால்மூலம் அனுப்பப்பட்டால் அது அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

15. 1934 ம் ஆண்டு தொழிலாளர் நலவுரிமைச் சட்ட இல. 19 (பகுதி 117) இன் கீழ் தொழிலாளரினால் செய்யப்படும் அரசாங்கத்தைப் பாதிக்கும் முறைப்பாடுகளுக்கு கொந்தராத்துக்காரரே பொறுப்புடையவராவார்.

16. விரும்பத்தகாதவரை வேலைக்கமர்த்துவதை எதிர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமையுண்டு.

17. குற்றப்பட்ட கொந்தராத்துக்காரர்கள் தனித்தோ அல்லது கூட்டாகவோ கேள்விப்பத்திரங்கள் கோரின் அவர்களுடன் கமத்தொழில் அதிபர் விரும்பாவிடின் ஒப்பந்தம் செய்து கொள்ளமாட்டார்.

18. மேலும் விவரங்கள் தேவைப்படின் ஒவ்வொரு பண்ணைகளுக்குமுரிய அதிபர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர் (க. க. வும், ப.).

பேராதனை.

12–718—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

எனது இலக்கம் : எல்/95

## காணிக் கொமிஷனர் இலாகா

மொனறாகலை மாவட்டத்தில், கீழ்க் குறிக்கப்படும் கட்டிட வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ந் திகதி பிற்பகல் 2.30 மணிவரை மொனறாகலை அரசாங்க அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) கல்கமுவவில் பொதுக் கிணறு ஒன்று கட்டுவதற்காக.

(2) நக்கலவில் 15 ம் மைல் அருகே பொதுக்கிணறு ஒன்று கட்டுவதற்காக.

(3) கலகஹகிவுலயில் பொதுக் கிணறு ஒன்று கட்டுவதற்காக.

(4) ஹம்பெகமுவ அலுத்வெவயில் பொதுக்கிணறு ஒன்று கட்டுவதற்காக.

(5) பெதியன் ஆரவில் பொதுக் கிணறு ஒன்று கட்டுவதற்காக.

(6) கடுகஹகல்கேயில் பொதுக் கிணறு ஒன்று கட்டுவதற்காக.

2. பகிரங்க வேலைப் பகுதி, கல்விப் பகுதி, அல்லது நீர்ப்பாசனப் பகுதியில் 15,000 ரூபாவுக்கும் அல்லது அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களுக்கு, கேள்விப் பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள் 12.1.1970 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மொனறாகலைக் கச்சேரியில் வினியோகிக்கப்படும்.

3. மேலே குறிக்கப்பட்ட எல்லா வேலைகளுக்கு கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 25 வீதம், மொனறாகலை கச்சேரியிலோ அல்லது வேறு எக்கச்சேரியிலோ பணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை, மொனறாகலை அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்து கேள்விக்கான வெற்றுப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். காசோலைகள், தபாற் கட்டளைகள், காசுக் கட்டளைகள் ஆகியன ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

4. பகிரங்க வேலைப்பகுதி, கல்விப் பகுதி, அல்லது நீர்ப்பாசனப் பகுதியில் 15,000 ரூபாவுக்கும் அல்லது அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள், பதிவு செய்யப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவையும் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனால் கேள்விப் பத்திர வைப்புப் பணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. பதிவு செய்யப்பட்டதற்கான பதிவைச் சமர்ப்பித்தலின் பின்னரே, கேள்விக்கான வெற்றுப்பத்திரங்கள் வினியோகிக்கப்படும்.

5. கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதியில், பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் கவரில் இடது பக்கமேல் மூலையில் வேலையின் பெயரும், கேள்விக்காரரின் பெயர் விலாசம் ஆகியவைகளும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால், கேள்விப் பத்திரங்களை கேள்விக்காரர் தாமாகவே மொனறாகலைக் கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் இடல் வேண்டும்.

6. கேள்விப் பத்திரங்கள் 1970 ஜனவரி 16 ந் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு மொனறாகலை கச்சேரி, மாகாண காணி அதிகாரி திறக்கப்படும் பொழுது கேள்விக்காரர்களோ அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளோ சமூகமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

7. கேள்விக்காரர்கள் இலங்கைத் தொழிலாளர்களை மட்டும் வேலைக்கமர்த்த வேண்டும்.

8. மேலதிக விபரங்களை மொனறாகலை அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஓ. சி. ஜயவர்தன,
மொனறாகலை அரசாங்க அதிபருக்காக.
மொனறாகலை மாவட்டம்.

கச்சேரி, மொனறாகலை,
6.12.1969.

12–731—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

எனது இலக்கம் : எல்/95.

## காணிக் கொமிஷனர் இலாகா

மொனறாகலை மாவட்டத்தில், கீழ்க் குறிக்கப்படும் கட்டிட வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் 1970 ஜனவரி மாதம் 16 ந் திகதி பி. ப. 2.30 மணிவரை கொழும்பு தபால் பெட்டி 500, காணிக் கொமிஷனர் காரியாலயத்திலுள்ள கேள்விப் பத்திரச் சபைத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) கொடியாகல கொளனி பாதை திருத்தங்கள்.

(2) எதிமொலே கொளனி பீ. ஓ. பீ. பாதை திருத்தலும் தார் போடுதலும்.

(3) ஹலந்தாவ கொளனி வலது வாய்க்கால் பாதையில் கட்டடங்கள் கட்டுவதற்காக.

(4) லுனுகல யோத வெவ, திட்டத்தில் வயலுக்குப் போகும் பாதை கட்டுவதற்காக.

(5) லியன் கொல்ல—மாகந்தன ஓய பாதை 1, 2 மைல் திருத்தங்கள்.

2. பகிரங்க வேலைப் பகுதி, கல்விப் பகுதி, அல்லது நீர்ப்பாசனப் பகுதியில் இலக்கம் 4 ஆகிய வேலைக்கு 25,000 ரூபாவுக்கும் இலக்கம் 1, 5 ஆகிய வேலைகளுக்கு 50,000 ரூபாவுக்கும் இலக்கம் 2, 3 ஆகிய வேலைகளுக்கு 100,000 ரூபாவுக்கும் அல்லது அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்களுக்கு, கேள்விப் பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள் 1970 ஜனவரி 12 ந் திகதி நண்பகல் 12 மணிவரை மொனறாகலைக் கச்சேரியில் விநியோகிக்கப்படும்.

3. இலக்கம் 4 ஆகிய வேலைக்குக் கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 25 வீதமும் இலக்கம் 1, 5 ஆகிய வேலைகளுக்கு ரூபா 50 வீதமும் இலக்கம் 2, 3 ஆகிய வேலைகளுக்குக் கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 100 வீதமும் மொனருகலைக் கச்சேரியிலோ அல்லது வேறு எக் கச்சேரியிலோ பணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டை, மொனருகலை அரசாங்க அதிபரிடம் சமர்ப்பித்துக் கேள்விக்கான வெற்றுப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். காசோலைகள், தபாற் கட்டளைகள், காசுக் கட்டளைகள் ஆகியன ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

4. பகிரங்க வேலைப் பகுதி, கல்விப் பகுதி அல்லது நீர்ப்பாசனப் பகுதியில் மேலே குறிக்கப்பட்ட கணக்குக்கு அல்லது அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள், பதிவு செய்யப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவையும் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். ஆனல் கேள்விப் பத்திர வைப்புப் பணம் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. பதிவு செய்யப் பட்டதற்கான பதிவைச் சமர்ப்பித்தலின் பின்னரே, கேள்விக்கான வெற்றுப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

5. கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதியில், பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் கவரில் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயரும், கேள்விக்காரரின் பெயர் விலாசம் ஆகியவைகளும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். கேள்விப் பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால், கேள்விப் பத்திரங்களைக் கேள்விக்காரர் தாமாகவே மொனருகலைக் கச்சேரியில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியில் இடல் வேண்டும்.

6. கேள்விப் பத்திரங்கள் 1970 ஜனவரி 16 ந் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு இலக்கம் 357 காமராவில் திறக்கப்படும் பொழுது கேள்விக்காரர்களோ அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளோ சமூக மாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

7. கேள்விக்காரர்கள் இலங்கைத் தொழிலாளர்களை மட்டும் வேலைக் கமர்த்த வேண்டும்.

8. மேலதிக விபரங்களை மொனருகலை அரசாங்க அதிபரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஒ. சீ. ஜயவர்தன,<br>
மொனருகலை அரசாங்க அதிபருக்காக,<br>
மொனருகலை மாவட்டம்.

மொனருகலைக் கச்சேரி,<br>
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 6 ந் உ.

12—730—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### அனுராதபுரம் மாவட்டத்தில் பஹலகிரிபாவாவிலுள்ள வைத்திய சாலை நகர்காவலர் நிலையக் கட்டடங்களுக்கு மின்இணைப்புச் செய்வதற்கான கேள்விப்பத்திரம்

மேற்குறிப்பிட்ட சேவை சம்பந்தமாக 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ம் திகதி முற்பகல் 11.00 மணிவரை காணி அபிவிருத்தி அதிபரால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25/- கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்பிற்கு வெளியி லுள்ள ஏதாவதொரு கச்சேரியிலோ செலுத்தி 1969 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ந் திகதி நண்பகல் 12.00 மணிவரை அதற்குரிய பற்றுச் சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களின் இணைப்படியில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

3. வைப்புப்பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டைக் கேள்விப் பத்திரதாரர்கள் கவனமாக வைத்திருந்து, வைப்புப்பணத்தை மீளப் பெற விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்க வேண்டும். இவைகளைக் கேள்விப்பத்திரங்களுடன் இணைக்கக்கூடாது.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அமைப்பதற்காகக் குறிக்கப் பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " பஹலகிரிபாவாவிலுள்ள வைத்தியசாலை நகர்காவலர் நிலையக் கட்டடங்களுக்கு மின்இணைப்புச் செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் " எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரர்களின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடது பக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்தி ரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களம் அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்ற முடியாதவையு மாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியில் இருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விப்பத்திரங்களை ஏற்றுக் கொண்ட திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் கேள்விக்காரர் வேலையை முடிக்க வேண்டும்.

8. தேர்வு பெற்ற கேள்விக்காரர் பிணைப்பணம் செலுத்தவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவும் கேட்கப்படுமிடத்துத் தவறின் அவரது கேள்விப்பத்திர வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ம் திகதி முற்பகல் 11.00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்தி ரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரங்களுக்குக் கேள்விக்காரர் விண்ணப்பிக்கும்போது இவ்வகையான வேலைகள் செய்வதற்குத் திறமையும், அனுபவமும் உண்டென்பதை நிரூபிக்கவேண்டும்.

11. தெரிவுசெய்யப்பட்ட கேள்விப்பத்திரதாரர் தேர்ச்சியுள்ள/தேர்ச்சி யற்ற இலங்கையரையே வேலை ஒப்பந்தத்தின் கீழ் வேலைக்கமர்த்த வேண்டும். கூடியவரை வேலை நடைபெறும் பிரதேசங்களிலிருந்தே கூலியாட்களை வேலைக்கமர்த்தல் வேண்டும்.

12. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றை யேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபணையற்ற உரிமையுண்டு.

13. வேறு ஏதாவது தகவல்கள் வேண்டுமாயின் காணி அபிவிருத்தித் திணைக்கள மேற்பார்வைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,<br>
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,<br>
எச்சலன் சதுக்கம்,<br>
கொழும்பு 1,<br>
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 12 ந் உ.

12-744—19.12.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## கைதடி அரசாங்க வயோதிபர் இல்லம்

### சவப்பெட்டிகள் கொடுத்தற்கான ஒப்பந்தம்

1970 பெப்ரவரி 1 ந் தேதி முதல் 1970 செப்டம்பர் 30 ந் தேதிவரை கைதடி அரசாங்க வயோதிபர் இல்லத்துக்கு சவப்பெட்டிகள் கொடுத்தற் கான ஒப்பந்தக் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கைதடி அரசாங்க வயோதிபர் இல்ல சுப்றின்ரெண்டனிடம் விபரங்கள் பெறலாம்.

2. கேள்விப் பத்திரங்கள், " சமூக சேவை அதிகாரி, பாலதக்ஷ மாவத்தை, காலிமுகப்பு, கொழும்பு " என்ற விலாசத்திற்கு, 1969 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆந் திகதி பகல் 12 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவு செய்யப்பட்ட தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தபால் கூட்டின் இடதுகை மூலையில் " 1969/70 ஆம் ஆண்டில் கைதடியில் உள்ள அரசினர் வயோதிபர் இல்லத்துக்கு பிரேதப் பெட்டிகள் வழங்குவதற்கு கேள்விப் பத்திரங்கள் " என்ற சொற்கள் தட்டெழுத்தில் பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களை அனுப்புவோர் விரும்பின், சமூக சேவைக் கந்தோரில் வைக்கப்பட்டுள்ள " கேள்விப் பத்திரப் பெட்டிக்குள் " தங்கள் கேள்விப் பத்திரங்களை நேரில் கொண்டு வந்து போடலாம்.

3. ஒப்பந்தக் கேள்விகள் எழுதிக் கொடுத்தற்கான மாதிரிப் பத்தி ரங்களை கைதடி அரசாங்க வயோதிபர் இல்ல சுப்றின்ரெண்டனிடம் பெறவேண்டும். ஒப்பந்த நிபந்தனைகள் பற்றிய விளக்கம் தேவைப் பட்டால் மாதிரிப் பத்திரங்களைக் கேட்கும் வேளையில் விளக்கமும் கொடுபடும்.

4. ஒப்பந்தக் கேள்வி மாதிரிப் பத்திரங்களைக் கொடுத்தற்கு முன் ரூபா 10/- சுப்றின்ட்றென்டனிடம் கட்டி பற்றுச்சீட்டு, கைதடி அரசாங்க வயோதிபர் இல்ல சுப்றின்ட்டென்டனுக்கு நேரில் கையளிக்க வேண்டும். இது தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரர் விஷயத்தில், அவருடைய பிணைக்காசில் ஒரு பாகமாகும். தெரிந்தெடுக்கப்படும் விண்ணப்பக் காரர் ஒப்பந்தம் செய்து வேலையைத் தொடங்குமுன் மேலும் மீதிப் பிணைக்காசு ரூபா 15/- கட்டும்படி கேட்கப்படுவர். தெரிந்தெடுக்கப் படாத விண்ணப்பக்காரர்களின் கட்டணங்கள் திருப்பிக் கொடுக்கப்படும்.

5. கேள்விப் பத்திரம் அனுப்புவோர் உரிய கேள்விப் பத்திரங்களை உரிய முறையில் நிரப்பி அனுப்புதல் அவசியம். செவ்வனே நிரப்பப் படாத கேள்விப்பத்திரங்களை ரத்துச் செய்வதற்குச் சமூக சேவை அதிகாரிக்கு உரிமை உண்டு.

6. விண்ணப்பக்காரர் ஒருவர் அவருடைய விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டபின் ஒப்பந்தம் செய்ய மறுத்தால் அல்லது தவறினாலேனும் பிணைக்காசு கட்டும்படி கேட்கப்படும்போது அங்ஙனம் செய்யத்தவறினாலேனும் அவர் கட்டிய பிணைக்காசை இழப்பர்.

7. ஒப்பந்தக் கேள்வி ஒன்றையாயினும் எல்லாவற்றையுமாயினும் நிராகரிக்கவும் ஒரு வருடத்துக்கு அதிகமாகாத காலத்துக்கு ஓர் ஒப்பந்தக் கேள்வியை ஏற்றுக்கொள்ளவும் அரசாங்கத்துக்கு ஆட்சேப மற்ற உரிமை உண்டு.

செ. நிற்குணனந்தன்,
சமூக சேவை அதிபருக்காக.

சமூக சேவைப் பகுதி,
பாலதக்ஷ மாவத்தை, காலிமுகப்பு,
கொழும்பு,
1969 ம் ஞூ டிசம்பர் மீ 19 ந உ.

12-736—19.12.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## கமத்தொழிற் சேவை இலாகா

### காய்தல் நிலம் கட்டுவதற்கான கேள்விகள்

காய்தல் நிலம் கட்டுவதற்கான கேள்விகள், 42, சேர் மாக்கஸ் பெனுண்டோ வீதி, கொழும்பு 7 ல் உள்ள கமத்தொழிற் சேவை இலாகாவின் கேள்விச் சபைத் தலைவரால் 1970 ம் ஆண்டு, ஜனவரி மாதம் 2 ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். நிலைய விபரங்கள் பின்வருமாறு :—

| மாவட்டம் | | குறிப்பிடம் | தொகை |
|---|---|---|---|
| அனுராதபுரம் | .. | பதவிய அரசாங்க அரிசி ஆலை | ஒன்று |
| மாத்தளை | .. | கந்தலம அரசாங்க அரிசி ஆலை | ஒன்று |
| பொல்லநறுவை | .. | பக்கமுன அரசாங்க அரிசி ஆலை | ஒன்று |
| மொனராகல | .. | மொனராகல அரசாங்க அரிசி ஆலை | ஒன்று |
| கண்டி | .. | பல்லேவத்தை அரசாங்க அரிசி ஆலை | ஒன்று |

2. கேள்விக் கட்டுப்பணமாக ரூ. 50 (ரூபாய் ஐம்பது) ஐ ஐந்து நிலையங்களுக்கும் தனித்தனியாக, 60, கோட்டன் இடம், கொழும்பு 7 ல் உள்ள கணக்காளரிடம் கட்டவேண்டும், அல்லது கொழும்பிற்கு வெளியேயுள்ள வேறு எந்தக் கச்சேரியிலோ கட்டிப் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து, 42, சேர் மாக்கஸ் பெனுண்டோ வீதி, கொழும்பு 7 இல் உள்ள கமத்தொழிற் சேவை ஆணையாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப் பத்திரப் படிவங்களில் மாத்திரமே கேள்விகள் ஏற்றுக்கொள்ளபடும். அவை இரு பிரதிகளில் இருக்க வேண்டும். கேள்விப் பத்திரம் சமர்ப்பிப்போர் ஒரு நிலையத்திற்கோ அல்லது அதிலும் மேற்பட்ட நிலையங்களுக்கோ சமர்ப்பிக்கலாம்.

3. ரூபா 10,000 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையில் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கட்டிட ஒப்பந்தக்காரர் மாத்திரமே கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர். அவர்கள் " பதிவுப் புத்தகத்தைக் " காட்டி படிவங்களை 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ம் திகதி பகல் 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். தபால் மூலமாக விண்ணப்பம் செய்வோர் தமது விண்ணப்பம் எனக்குக் குறித்த கால எல்லைக்குள் கிடைக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.

4. 42, சேர் மாக்கஸ் பெனுண்டோ வீதி, கொழும்பு 7 இல் உள்ள கமத்தொழிற் சேவை ஆணையாளரிடமிருந்து மேலதிக விபரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

வி. தி. நவரத்ன,
கமத்தொழிற் சேவை ஆணையாளருக்காக.

கமத்தொழிற் சேவை இலாகா,
42, சேர் மாக்கஸ் பெனுண்டோ வீதி,
கொழும்பு 7,
19.12.1969.

12—766—19.12. 69ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## இலங்கைப் பரீட்சைப் பகுதி

### கழிவுக் கடதாசிகளின் விற்பனைக்கும் அவற்றை அகற்றுவதற்குமான கூறுவிலைகள்

1969 ஒக்டோபர் 1 ஆம் தேதி தொடக்கம் 1970 செப்ரெம்பர் 30 ஆம் தேதிவரை பரீட்சைப் பகுதியிற் சேர்ந்த பின்வரும் கழிவுக் கடதாசிகளின் விற்பனைக்கும் அவற்றை அகற்றுவதற்குமான கூறுவிலைகள், 1970, ஜனவரி 3 ஆம் திகதி அன்று பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) பழைய விடைத்தாள்களும், பழைய வினாப்பத்திரங்களும், வழக்கிலில்லாத மாதிரிப் பத்திரங்களும்,

(2) ஏனைய கழிவுக் கடதாசிகள் (உபயோகித்த கபில நிறக் கடதாசிகள்' பெரிய காகித உறைகள், குப்பை கூடைகளிற் சேர்ந்த கடதாசிகள்).

விடைத்தாள்களும், வினாப்பத்திரங்களும், அவைகளின் அந்தரங்கமான தன்மை காரணமாக, அவைகளை அப்புறப்படுத்துவதற்கு முன்னர், கொள்வனவுகாரரின் செலவிலேயே, வெட்டும் பொறியிலிட்டு வெட்டப்படல் வேண்டும்.

கூறுவிலையில் ஒரு அந்தர் பழைய விடைத்தாள்களுக்கும் வினாப்பத்திரங்களுக்கும் வழக்கிலில்லாத மாதிரிப் பத்திரங்களுக்கும் உரிய விலை தனிப்படவும், ஒரு அந்தர் ஏனைய கழிவுக் கடதாசிகளின் விலை தனிப்படவும் குறிப்பிடப்படல் வேண்டும்.

ரூபா 25/- ஐ பரீட்சைப் பகுதியின் பெயரில் வைப்புப் பணமாகச் செலுத்திய தற்கான பற்றுச் சீட்டின் இலக்கமும் அது பெறப்பட்ட திகதியும், அனுப்பப்படும் ஒவ்வொரு கூறுவிலையிலும் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

கூறுவிலை ஏற்றுக் கொள்ளப்பட்டதாக எழுத்து மூலம் அறிவித்தல் கொடுக்கப்பட்ட ஒருவர், மூன்று நாட்களுள் அதை ஏற்றுக் கொள்ளத் தவறின், அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்பட்டுவிடும். எவர்களுடைய கூறுவிலைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவர்களின் வைப்புப்பணம் நாளடைவில் அவர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்படும்.

கூறுவிலைப் பத்திரத்தைக் கொண்டுள்ள உறையின் இடதுபக்க மேல் மூலையில் " கழிவுக் கடதாசிகளின் கொள்வனவுக்கான கூறுவிலைகள் " எனக் குறிப்பிடுதல் வேண்டும். உறையைச் சீல்பண்ணிப் பதிவுத் தபாலுறையிலிட்டு, பரீட்சாதிகாரி, மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

கூறுவிலைகளை அனுப்பியவர்கள், கூறுவிலைகளைப் பெற்றுக் கொள்ளும் கடைசித் தேதியிலன்று, மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தில் கூறுவிலைகளைத் திறந்து பார்க்கும் பொழுது சமூகமாயிருப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

கிழமை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி. ப. 4.00 மணி வரையும், போயாவுக்கு முதனாளில் காலை 9.00 மணி தொடக்கம் 11.30 மணி வரையும் இக்கழிவுக் கடதாசியின் மாதிரிகளை இப் பகுதியிற் பார்வையிடலாம்.

எவருடைய கூறுவிலை ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ அவர், அறிவித்தலின் பேரில், செலுத்த வேண்டிய முழுத் தொகையையும் தாமதமின்றி உடனேயே செலுத்திய பின்னர், சேர்ந்த கழிவுக் கடதாசிகளை அப்புறப் படுத்தல் வேண்டும்.

இனம் (1) உக்கு எவருடைய கூறுவிலை ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ அவர், ரூபா 1,000/- ஐ வைப்புப் பணமாக இப் பரீட்சைப் பகுதியில் கட்டுதல் வேண்டும்.

கே. ரீ. டபிள்யூ. சமரணசூரிய,
பரீட்சாதிகாரி.

மலே வீதி,
கொழும்பு 2.
1969 ம் ஞூ டிசெம்பர் மீ 12 ந உ.

12–841—19.12.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885.

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவுக்குச் சிலாப மாவட்டத்திலுள்ள சின்ன கறுப்புப்பனை என்னுமிடத்தில் ½ தொன் முதல் 1 தொன் வரையிலான 4,000 பாறுங் கற்களையும், 9" முதல் 12" வரையிலான 200 கியூப் உடை கற்களையும் வழங்குவதற்கும் ஒப்படைப்பதற்குமான கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1970 ஜனவரி 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்வார். பாறுங் கற்களைத் தகர்ப்பதற்கும், ஏற்றிச் செல்வதற்குமெனப் பொறித் தொகுதிகளும் சாதனங்களும் தங்களிடமுண்டு என்பதற்கான சான்றையும், பாறுங் கற்களை வழங்கும் பெரிய ஒப்பந்தங்களைத் திறமையுடன் யுடன் தாங்கள் நிறைவேற்றியதற்கான சான்றையும் ஒப்பந்தக்காரர்கள் காட்டுதல் வேண்டும்.

1970 ஜனவரி 20 ஆந் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புக்கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளவேண்டும். அல்லது அவர் நேர் முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்களக் கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100/- க்கு கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுச் சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1970 ஜனவரி 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

எல். எஸ். த சில்வா,
கப்பற்றுறை ஆணையாளருக்காக.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசம்பர் மீ 19 ந உ.

12–746—19.12.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## கட்டடங்கள் திணைக்களம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 1970 ம் ஆண்டில் அரசாங்க கட்டட பராமரிப்பு வேலைகளும் சிறிய திருத்தங்களும் செய்வதற்கு கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் கட்டடங்கள் திணைக்களம் வடபகுதி கண்காணிப்புப் பொறியியலாளர் காரியாலய கேள்விச்சபையின் தலைவரால் 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ந் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**மாவட்டத்தொகுதிகள் ஏ, பீ, சீ, டீ ஒவ்வொன்றிற்கும் வெவ்வேறு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.**

2. கட்டடங்கள் திணைக்கள யாழ்ப்பாண மாவட்ட நிறைவேற்றுப் பொறிவலாளரிடமிருந்து பெறப்படும் கேள்விப்பத்திரங்களில் இணைப்படிவமாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வேண்டிய இதர விபரங்களை மேற்படி பொறிவலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. கட்டடங்கள் திணைக்களத்தில் தொகுதிகள் "ஏ", "பீ", "சீ", "டீ" இவற்றிற்கு முறையே ரூபா 60,000, 75,000, 67,000, 30,000 க்கும் குறையாத கட்டிட நிர்மாணத்திற்கென பதிவுபெற்றுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டும், அவர்கள் கேள்விக்கட்டணமாக ரூபா 100 "ஏ", "பீ", "சீ" ஒவ்வொன்றிற்கும் ரூபா 50 "டீ" க்கும் செலுத்திய பற்றுச்சீட்டுகளை 1970 ம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு முன்பதாக மேலே குறிப்பிட்ட பொறிவலாளருக்குக் கொடுத்ததன் பின்னரே கேள்விப்பத்திரங்களை பெறுவதற்கு தகுதி பெறுவர்.

குறித்த காலத்திற்குப் பின்னர் கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் தாமதமாகும் ஒரு நாளுக்கோ அல்லது ஒரு நாளின் பகுதிக்கோ ரூபா 10 வீதம் மீளளிப்புச் செய்யப்படாத தாமதக் கட்டணத்தை மேலே குறிப்பிட்ட பொறிவலாளரிடம் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெறுவதன் பேரில் கேள்விப்பத்திரங்களை பெறக்கூடியவராவர்.

4. கேள்வியாளராக முன்வரும் ஒவ்வொரு விண்ணப்பக்காரரும் கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னதாக தம் ஒப்பந்தக்காரப் பதிவுப் புத்தகத்தையோ அல்லது தகுதி தாள் கடிதத்தையோ குறிப்பிட்ட பொறிவலாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்களைக் கோர விரும்பும் விண்ணப்பக்காரர் பற்றுச்சீட்டைக் கொடுக்கும்போது நிறைவேற்றுப் பொறியியலாளரிடமிருந்து தகுந்த பத்திரத்தைப் பெற்று அதில் கைவசம் இருக்கும் வேலைகளின் விபரங்களைக் குறிப்பிட்டு அததற்கேற்ற கேள்விச்சபைகளுக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. கேள்விப்பத்திரங்களுக்குரிய கட்டணத்தைக் கொழும்பு கோட்டையிலுள்ள கட்டடங்கள் திணைக்களத்திலோ தவிர்ந்த இதர இடங்களிலுள்ள கச்சேரிகளிலோ கட்டலாம்.

தெ. மாணிக்கம்,
கண்காணிப்பு பொறிவலாளர், வடபகுதி,
(கட்டடங்கள்)

கண்காணிப்புப் பொறிவலாளர்,
வடபகுதி அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம்,
யாழ்ப்பாணம்,
1969.12.9.

12–755—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## கண்டி கட்டட திணைக்களம்

கண்டி கட்டடத் திணைக்கள கட்டிட வேலைக்குத் தேவையான கீழ்க்காணும் கட்டடப் பொருட்கள் தேவைப்படுகின்றன. பதிவு செய்யப்பட்ட கன்ருக்கர்களிடம் இருந்தே மேற்படி பொருட்கள் ரெண்டர் மூலம் பெறப்படுகின்ற தாகையால் பதிவு செய்ய விருப்பம் உள்ளவர்கள் எழுத்து மூலம் 5.1.70 நண்பகல் 12 மணிக்கு முன் கட்டட நிர்மாண என்ஜினியர், தபால் பெட்டி நம்பர் 6, மொறட்டுவ என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பம் செய்ய விரும்புபவர்கள் தாங்கள் அனுப்பும் விண்ணப்பப் பத்திரத்தில் பின்வரும் விபரங்களை உடையதாயிருக்கவேண்டும் :

(அ) விண்ணப்பக்காரர் விநியோகிக்கக் கூடிய பொருட்கள்.

(ஆ) தன் வசமுள்ள லொறி, ரக்டர், ரிப்பர் முதலியவற்றின் பதிவு இலக்கம் அவை இவ்வருடத்திற்கு பாவிக்க அனுமதிச் சீட்டு உடையதா என்பனவற்றை தெரிவிக்க வேண்டும்.

(இ) இவ்விதமான வேலைகள் முன்னர் செய்த அத்தாட்சிப்பத்திரங்கள் உண்டா? இருந்தால் அவைகளின் பிரதிகளையும் அணைத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பக்காரர் இவ்வேலை செய்வதற்கு தகுந்த பொருள் வசதி உடையவராய் இருந்தல் வேண்டும்.

### தேவையான பொருட்கள்

1. ¾" சரளைக் கல் (மெற்றல்)
2. 1" ஷை
3. 1½" ஷை
4. 2" ஷை
5. செங்கல்
6. ஆற்றுமணல்
7. சுண்ணாம்பு (அவித்ததும், அவியாததும்)
8. 6"—9" கருங்கல்
9. மரக்கப்புகள்
10. மூங்கில் (தற்காலிக மேடை கட்டுவதற்கு)

எச். டி. சில்வா,
பிரதான நிர்மாண எஞ்சினியர்,
(கட்டடங்கள்)

தபால் பெட்டி நம்பர் 6,
மொறட்டுவ.

12–769—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## பொருட்களின் விற்பனை

மீண்ட கடித அலுவலகத்தில் உரிமை கோரப்படாத அஞ்சற் கட்டுக்களில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள், கொழும்பு 3, கொள்ளுப்பிட்டி, 19 ம் ஒழுங்கை 20 ம் இலக்கத்திலுள்ள மீண்ட கடித அலுவலகத்தில், 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1.30 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனவு செய்யப்படும்.

நியாயமான விலை கோரப்படாத ஒத்த விடயமும் விற்பனையிலிருந்து நிறுத்தி வைக்கப்படும்.

பி. டி. எம். லியனகே,
அஞ்சல் அதிபர் நாயகமும் தந்திப் போக்குவரத்து அதிபருக்குமாக.

நிர்வாகப் பிரிவு,
அ. த. தலைமை அலுவலகக்கட்டிடம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 2 ந உ.

1. ஒரு அந்தர் பழைய புதினத்தாள்கள்.
2. ஒரு அந்தர் பழைய புதினதத்தாள்கள்.
3. 40 முத்தல் பாவனையற்ற தாள்களைக் கொண்ட 35 பைகள்.
4. ஒரு கட்டு ஆங்கில சஞ்சிகைகள்.
5. டிை
6. டிை
7. டிை
8. டிை
9. டிை
10. டிை
11. டிை
12. ஒரு கட்டு தமிழ் சஞ்சிகைகள்.
13. ஒரு கட்டு சமய சஞ்சிகைகள்.
14. ஒரு கட்டு வைத்திய வெளியீடுகள்.
15. ஒரு கட்டு ஆங்கில புத்தகங்கள்.
16. 20,000 பாவனை செய்த உள்ளூர் வெளிநாட்டு முத்திரைகள்.
17. ஒரு கட்டு சமயப்படங்கள்.
18. ஒரு கட்டு சமயப்படங்கள்.
19. 3 இந்திய நூல் புடவைகள்.
20. 3 இந்திய நூல் புடவைகள்.
21. 3 இந்திய நூல் புடவைகள்.
22. 3 இந்திய நூல் புடவைகள்.
23. வர்ண நூல் பக்கெட்டுகள், 2 பெட்டி சுருட்டுகள்.
24. 2 பக்கெட் வில்கின்சன் பிளேட், ஒரு சிவப்பு சால்வை, 2 மூக்குக் கண்ணாடிகள், 1 பேனை, ஒருபக்கெட் ஊசிகள், பிறேஸ்லெற், ஒரு பாவனை செய்த முத்திரை அட்டை.
25. ஒரு நெருப்பணைக்கும் கருவி.

12-801—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

---

## ஏலம்

### உள்ளூராட்சி அமைச்சு

கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் கொழும்பு 1, யோக் வீதி, கேமாஸ் கட்டடத்தின் 1 ஆம் மாடியில் உள்ள உள்ளூராட்சி அமைச்சு அலுவலகத்தில் 31.12.69 ஆம் திகதி மு. ப. 11. மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. கையிருப்பில் உள்ள பழைய புதினப்பத்திரிகைகள்.
2. பாவிக்கப்பட்ட ஏழு ஜீப்/மோட்டார் வண்டித் தயர்கள்.

கொள்வனவு செய்த பொருட்களுக்காக பணத்தை அவ்விடத்திலேயே கொடுப்பதுடன் ஏலம் நடந்த தினம் பி. ப. 4.30 மணிக்கு முன் வாங்கிய பொருட்களை அப்புறப்படுத்தல் வேண்டும்.

சிறிசேன வெலிகல,
நிரந்தர செயலாளருக்காக.

உள்ளூராட்சி அமைச்சு,
1 ஆம் மாடி, கேமாஸ் கட்டிடம்,
யோக் வீதி, கொழும்பு 1,
1969 ம் ஆண்டு டிசெம்பர் மீ 7 ந உ.

12-843—29.12.69 ந் திகதிய வர்த்தமனி இல. 14,885

---

# ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

## ஆய விற்பனையும் குத்தகை விற்பனையும்

### வவுனியா மாவட்டத்தில் கள்ளுத் தவறணை குத்தகை மறு விற்பனை 1.1.70 தொடக்கம் 30.6.70 வரை

இதில் காட்டப்பட்டிருக்கும் அட்டவணையில் சொல்லப்பட்ட வவுனியா மாவட்ட கள்ளுத் தவறணையில் 1.1.70 தொடக்கம் 30.6.70 வரைக்குமான கால எல்லைவரை சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதன் பொருட்டு சிறப்புரிமை வழங்குவதற்காக நடைமுறையில் இருந்து வரும் பொது விதிகளுக்கமையவும், பிரசுரிக்கப்பட்ட 14,846 ம் இலங்கை அரசாங்க வர்த்தமானியில் காணப்படும் கள்ளுத் தவறணை குத்தகை விதிகளுக்கமையவும் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. கேள்விப்பத்திரங்கள் " வவுனியா மாவட்ட கள்ளுக்குத்தகை, 1969–70 " என்று குறிப்பிட்டு 1969 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 28 ம் திகதி கீழே காட்டப்பட்டிருக்கும் நேர அட்டவணைப்படி வவுனியா அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

3. ஐந்து பேருக்கு அதிகமானவர்கள் கூட்டாகச் சேர்ந்து எந்த ஒரு தவறணைக்கும் கேள்விப்பத்திரம் அனுப்ப முடியாது.

4. கேள்விக்காரர் :—

(அ) நேர்முகத்தில் சமுகம் தராவிட்டால் ;

(ஆ) எந்தப்பகுதியில் அவருடைய காணி இருக்கின்றதோ அந்தப் பகுதி காரியாதிகாரியிடம் பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்துடன் கேள்விப்பத்திரம் அணைக்காவிடில்,

(இ) பெறுமதிக்குரிய அத்தாட்சிப்பத்திரத்தில் சொல்லப்பட்ட காணியில் பெறுமதி கேள்விப்பத்திரத்தில் குறிக்கப்பட்ட தொகையின் 25 வீதத்திற்கு குறைந்தால், அவரது கேள்விப்பத்திரம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

5. கேள்விப்பத்திரங்களை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கலாம் அல்லது வவுனியாக் கச்சேரியில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியிலும் போடலாம். ஆனால் கேள்விப்பத்திரம் எந்தத் தவறணைக்கு தாக்கல் செய்யப்பட்டுகின்றதோ அந்தத் தவறணையின் பெயரும் இலக்கமும் என்வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் பொறிக்கப்பட்டு, என்வலப்பு சீல் பண்ணப்பட்டிருத்தல் வேண்டும். ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் தனித்தனி என்வுலப்பில் வைத்து மேற்காட்டிய குறிப்புக்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

6. தவறணை விற்பனை நிபந்தனைக்கு அமைவாக ஒவ்வொரு விண்ணப்பகாரரும் ரூபா 1,000 கட்டுப்பணமாகக் கட்டியதற்கு அத்தாட்சியாக கச்சேரிப் பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும். கட்டுப்பணங்கள் வவுனியா அரசாங்க அதிபரின் பெயரில் கட்டல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பகாரர் தெரிவு செய்யப்பட்டவுடன் விற்பனை நிபந்தனைகளுக்குக் கையொப்பமிடத் தவறினால் கட்டுப்பணத்தை இழக்க நேரிடும்.

7. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ வவுனியா அரசாங்க அதிபருக்கு மாத்திரம் உரிமையுண்டு.

8. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் விற்பனை நிபந்தனையிலும் ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடவும், அரசாங்க அதிபரால் குறிப்பிடப்படும் பிணைப்பணத்தைச் செலுத்தவும் தேவையான முத்திரைகளைக் கொடுக்கவும் தயாராயிருத்தல் வேண்டும்.

9. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் குத்தகைக்காரர் என்று அறிவிக்கப்பட்ட மாத்திரத்தில் தான் எந்த இடத்தை தவறணைக்காக தெரிவுசெய்கிறார் என்பதை வவுனியா அரசாங்க அதிபருக்கு அறிவித்து அவரிடமிருந்து அதற்கான அனுமதியையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

10. மேற்கொண்டு விபரங்கள் அறியவிரும்பின் வவுனியாக் கச்சேரிக்கு மனுப்பண்ணிப் பெற்றுக்கொள்ளலாம்.

### மேற்கூறப்பட்ட அட்டவணை

வவுனியா மாவட்ட கள்ளுத்தவறணைகள் மறுவிற்பனை (1.1.70/30.6.70)

| இலக்கமும் | இடமும் | தவறணைகளின் உள்ளூர்ப்பகுதி | விற்பனைத் திகதி நேரம் |
|---|---|---|---|
| 7. | வவுனியா | வவுனியா நகர சபை எல்லைக்குள் | 9.00 காலை |

பி. சி. பெரேரா,
அரசாங்க அதிபர், வவுனியா மாவட்டம்

வவுனியா, மாவட்டம்
1969 ம் வருடம் டிசம்பர் மாதம் 9 ம் திகதி.

12-789—19.12.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,885

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.**

**இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைத்த அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விளம்பரதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்களை தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.**

**அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1969

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| டிசெம்பர் | 5.12.69 | வெள்ளி | 28.11.69 | வெள்ளி | பி. ப. | 3 30 |
| | 12.12.69 | வெள்ளி | 4.12.69 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 19.12.69 | வெள்ளி | 12.12.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 26.12.69 | வெள்ளி | 18.12.69 | வியாழன் | பி. ப. | 3.00 |
| **1970** | | | | | | |
| சனவரி | 2.1.70 | வெள்ளி | 26.12.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 9.1.70 | வெள்ளி | 2. 1.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 16.1.70 | வெள்ளி | 8. 1.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 23.1.70 | வெள்ளி | 16. 1.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 29.1.70 | வியாழன் | 21. 1.70 | புதன் | ந. ப. | 12.00 |
| பெப்புருவரி | 5.2.70 | வியாழன் | 28. 1.70 | புதன் | பி. ப. | 3.30 |
| | 13.2.70 | வெள்ளி | 5. 2.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 20.2.70 | வெள்ளி | 13. 2.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 27.2.70 | வெள்ளி | 20. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| மாச்சு | 5.3.70 | வியாழன் | 27. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 13.3.70 | வெள்ளி | 5. 3.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 20.3.70 | வெள்ளி | 13. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 26.3.70 | வியாழன் | 20. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி, கொழும்பு.
1969 ஆம் ஆப் திசெம்பர் மீ 12 ஆந் வ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்கப் அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.